# பாடப் புத்தகங்களுக்கு 'பீக்ஸ்' விதிவிலக்கு?

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

[illegible] 12
இதழ்: 120
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 28 ரபி: ஆகிர் 6 வியாழக்கிழமை [11-6-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## அரசாங்கம் ஆலோசனை

**கொழும்பு, புதன்**

**வெளி செலாவணி உரிமை சான்றிதழ் திட்டத்திலிருந்து பாடப்புத்தகங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படலாம் என்று நம்பகமாக அறியப்படுகிறது.**

வெளிநாடுகளிலிருந்து நூல்கள் இறக்குமதி செய்வதற்கு வெளி செலாவணி உரிமை சான்றிதழ் திட்டத்தினால் இருந்துவரும் சங்கடங்கள் பற்றியும் அவைகளை நிவர்த்திசெய்வற்றியும் பது அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

இதுசம்பந்தமாக மத்திய வங்கி, வெளிநாட்டமைச்சு நிதியமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கிடையில் இப்பொழுது ஆலோசனைகள்நடைபெற்று வருவதாக அறியப்படுகின்றது.

வெளிநாடுகளிலிருந்து புத்தகம் இறக்குமதிசெய்வதற்கு வெளி செலாவணி உரிமை சான்றிதழ் பெற வேண்டிய கட்டாயம் இருப்பதனால் அத்தியாவசிய புத்தகங்களின் விலைகள் அதிகரித்திருப்பதுடன், அவைகளுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும் கருதப்படுகிறது: எனவே 'பீக்ஸ்' திட்டத்தை முற்றாகவே நீக்காதுபோனாலும் அத்தியாவசியமான புத்தகங்கள் இறக்குமதிசெய்யும் விஷயத்திலாவது இத்திட்டத்தைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் ஆலோசிப்பதாகத் தெரிகிறது.

அனேகமாகப் பாடப் புத்தகங்களுக்குப் 'பீக்ஸ்' திட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இரண்டுகொத்து அரிசி வழங்க வெளிநாடுகளுடன் தொடர்பு

## வர்த்தக மந்திரி இலங்கரத்தின அதிகாரிகளுடன் ஆலோசனை

**கோட்டை, புதன்**

இரண்டு கொத்து அரிசி வழங்குவதென்ற தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற கூட்டணி அரசு பல நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது.

சீன, பர்மா, தாய்லாந்து போன்ற நாடுகளுடன் அரிசியைப் போதியளவு பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன. ஐக்கியஅரபுக் குடியரசுடனும் இதுசம்பந்தமாக தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

உலக மார்க்கெட்டில் அரிசியின் விலையில் வீழ்ச்சி ஏற்படுமா என்பது தான் இப்போது அரசாங்கத்தின் கேள்வியாகவுள்ளது.

வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக மந்திரி திரு. ரி. பி இலங்கரத்தின இரண்டு கொத்து அரிசி வழங்குவதற்காக எவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்வதென்பது குறித்து உயர் அதிகாரிகளுடன் தொடர்பான ஆலோசனைகளை நடத்தினர்

இலங்கைக்கு இதுவரை காலமும் அரிசி வழங்கிவந்த நாடுகளில் அனேகமாக நெல் விளைந்திருப்பதால், உலகமார்க்கெட்டில் அரிசி விலையில் வீழ்ச்சி ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதால் இரண்டு கொத்தரிசியைச் சுலபமாக வழங்கலாமென்று கூட்டணிஅரசு கருதுகிறது

அமெரிக்க அரசு தொடர்ந்து அரிசி வழங்க முன்வந்த போதிலும் அதனது அரிசி உள்ளூர் தேவைக்கு ஒத்து வராது என அரசு கருதுகிறது.

இவ் வருடத்திற்கான றப்பர் அரிசி ஒப்பந்தத்திற்கு புறம்பான முறையில் ஏப்ரல் மாதம், மேலதிகமாக 20,000 தொன் றப்பர் வழ[illegible]

## பஸ் சாரதி கொலை: மேலும் நால்வர் கைது

**முல்லைத்தீவு, புதன்**

முல்லைத்தீவில் பஸ் கண்டக்டர் துரைராஜா கொலை செய்யப்பட்டதை தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் கிராமசபைத் தலைவர் ஒருவரும் ஆசிரியர் ஒருவரும் மற்றும் இருவரும் நேற்றுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

முல்லைத்தீவு மேலதிக மாஜிஸ்திரேட் திரு ஏ.எம். சகீது மரண விசாரணை நடத்தினர். முல்லைத்தீவு வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை செய்தார்.

கொலையுண்ட கண்டக்டருக்கும், குமுழமுனையிலுள்ள கல்லூரி மாணவி ஒருவருக்குமிடையில் [illegible] இருந்துவந்[illegible] இரு[illegible] [illegible]து பெற்றோர்களும் இவர்களின் திருமணத்திற்குச் [illegible] கைது செய்யப்பட்டனர். பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் லியனகே தொடர்ந்து புலன்விசாரணைசெய்து வருகிறார்.

பஸ் சாரதியான முகமதலி தமக்கு, இக்கொலை பற்றி எதுவும் தெரியாதென விசாரணையில் கூறியிருக்கிறார். பஸ் சாரதி தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பிலிருந்துவருகிறார். கொலையுண்ட பஸ்கண்டக்டர் துரைராஜா பருத்தித்துறையைச் சேர்ந்தவர்.

## யானைக்குட்டி பரிசு?

பளை புதன்

ஒட்டிசுட்டான் விவசாயப்படை வீரர்கள் பொதுத் தேர்தலில் ஐக்கிய[illegible]முன்[illegible]

## பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு 2 உதவி அமைச்சர்கள்

## இ. போ. ச. தொழிற்சங்கப் பிரதிநிதிகளை லெஸ்லி, அனில் சந்திப்பர்

**கோட்டை, புதன்**

**நாடு முழுவதிலுமுள்ள இலங்கைபோக்குவரத்துச் சபை டிப்போக்களைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளைபோக்குவரத்து அமைசசர்திரு.லெஸ்லி குணவர்த்தனவும், இ: போ. சபைத் தலைவர் திரு: அனில்முனசிங்காவும் நாளை சந்தித்துப் பேசுவர்.**

நாரன்பிட்டியவிலுள்ள இ. போ. சபை தலைமை அலுவலகத்தில் இந்தச் சந்திப்புநடைபெறும்.

நாட்டு மக்களுக்கு சிறந்த பஸ்சேவையை அளிப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இ. போ. ச. தொழிலாளருக்கு உள்ள கஷ்டங்கள் பற்றியும் ஆராயப்படும்

இ. போ. ச தொழிலாளர்கள்தமது கடமையை உணர்ந்து சுயநலக்கலப்பற்றநல்ல சேவையைபொதுமக்களுக்கு ஆற்றவேண்டுமென அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொள்வார்: கூட்டுத்தாபனத் தலைவர் திரு. அனில் முனசிங்கா இதே கருத்தை வற்புறுத்துவார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதுவரை காலமும் தமக்கு இருந்துவந்த குறைகளையும், கஷ்டங்களையும் அமைச்சரிடமும், திரு. அனில்முனசிங்காவிடம்எடுத்துக்கூறுவர்.

தேசிய அரசாங்க காலத்தில் இ. போ. சபை தொழிலாளர்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்ததைச் சுட்டிக்காட்டுவதோடு தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு இதுபோன்ற கஷ்டங்கள் எதிர்காலத்தில் ஏற்படமாட்டாதென்றும் வாக்குறுதி அளிப்பாரெனத்தெரிகிறது.

ஒதுக்கப்பட்ட

## 700 பஸ்கள் மீண்டும் வீதிகளில் ஓடும்

**கொழும்பு, புதன்**

கடந்த காலங்களில் பொது வீதிகளில் ஓடமுடியாதவையென்று ஒதுக்கி வைக்கப்படிருந்த சுமார் 700 பஸ்கள் மீண்டும் ரஸ்தாக்களில் ஓடவிருக்கின்றன.

இந்த பஸ்களை தொழிலாளர்களதும் ஊழியர்களதும் ஒத்துழைப்புடன் மீண்டும் சேவையில் ஈடுபடுத்த போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. அனில் முனசிங்க முடிவு செய்திருக்கிறார்.

முன்னைய இ. போ. ச. அதிகாரிகளின் அசமந்தப் போக்கினாலும், அக்கறையின்மையினாலும், இந்த பஸ்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் அவைகளை திருத்தி இன்னும் இரண்டு மாதங்களுக்குள் சேவையில் ஈடுபடுத்த முடியும் என்று திரு. அனில் முனசிங்க நம்புகிறார்.

## எஞ்சினியர்களின் தேசப்பற்று: பீட்டர் கெனமன் பெருமகிழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள் தெரிவிக்கின்றன. ஐக்கியஅரபுக் குடி

பது குறித்து உயர் அதிகாரிகளுடன் தொடர்பான

பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு

## 2 உதவி அமைச்சர்கள் 3 நிரந்தர காரியதரிசிகள்

கோட்டை, புதன்

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்குக்கீழ் உள்ள அமைச்சுகளுக்கு உதவி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டது போல, நிரந்தரக்காரியதரிசிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்குகீழ் உள்ள பாதுகாப்புவெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக திரு. ஏ. ஆர். இரத்தினவேலுவும், பொருளாதார திட்டமிடல் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக பேராசிரியர் எச். ஏ. டி. எஸ் குணசேகராவும் நியமிக்கப்பட்டுள்ளனர். வேலைவாய்ப்பு அமைச்சுக்கு மற்ருெரு நிரந்தரக் காரியதரிசி விரைவில் நியமிக்கப்படுவார்.

திருமதிபண்டாரநாயக்கா பிரதம அமைச்சர் பதவியுடன், பாதுகாப்பு, வெளிவிவகாரம், பொருளாதாரம் திட்டமிடல், வேலைவாய்ப்பு ஆகிய அமைச்சுக்களுக்கும் பொறுப்பாகவிருக்கிருர். பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்கும், திட்டமிடுதல் வேலைவாய்ப்பு அமைச்சுக்கும் தனித்தனியே உதவி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

உத்தியோக பூர்வமான

## வாசஸ்தலம், காரை ஸ்ரான்லி பாவிக்கமாட்டார்

கொழும்பு, புதன்

தமக்களிக்கப்பட்ட உத்தியோகபூர்வமான காரையும் வாசஸ்தலத்தையும் பாவிக்கப் போவதில்லையென சபாநாயகர் திரு. ஸ்ரான்லி திலகரத்தின அறிவித்துள்ளார்

பிரதம மந்திரி செனட் சபைத் தலைவர் ஆகியோருககு வழங்யிருப்பதுபோல சபாநாயகருக்கும் உத்தியோகபூர்வமான கார் வழங்கம்பட்டிருக்கிறது. கொள்ளுப்பிட்டியிலுள்ள 'மும்தாஜ் மகால்' சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமான வாசஸ்தலமாகவும் வழங்கப்பட்டுள்ளது

உத்தியோகபூர்வமான வாசஸ்தலத்தை சம்பிரதாய வரவேற்புக்களின் போது மட்டுமே பாவிக்கப் போவதாகவும் மற்றும் சமயங்களில் பாவிக்கப்போவதில்லையென்றும் சபாநாயகர் அறிவித்துள்ளார்.

உத்தியோக பூர்வமாக தமக்கு வழங்கப்பட்டிருக்கும் காரை வைபவங்களுக்கு மட்டுமே பாவிக்கப்போவதாகவும் அறிவித்துள்ளார்

(சி பி ஏ)

## கம்போடியாவில் கடும் சண்டை!

### வியட்காங் முன்னேற்றம்

பாங்கொக், ஜூன் 10

கம்போடியாவில் உல்லாசப்பயணத்திற்குப் புகழ்பெற்ற சியம்ரிப் மீது கம்யூனிஸ்ட் துருப்புகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

இந்நகருக்கு 6 மைல்தூரத்திலுள்ள அங்கோர் வாட் என்னும் சரித்திரப் புகழ்பெற்ற இந்துக்கோயிலைப் பிடிக்கும் நோக்குடன் கம்யூனிஸ்ட் படைகள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன.

கம்போடிய அரசாங்கப் படைகளுக்கு ஆதரவாக தென்வியட்னும் அமெரிக்கப் படைகள் அனுப்பப்பட்டுள்ளன.

பல இடங்களிலும் கடும் சண்டைகள் நடைபெற்று வருகின்றன. தாய்லாந்து எல்லையில் தாய்லாந்துபடைகள் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன தாய்லாந்து படைகள் கம்போடியா அரசாங்கத்திற்கு ஆதரவாக அனுப்பப்படலாம்என்பதை பாங்கொக்கிலும் இராணுவ வட்டாரங்கள் நாசூக்காக தெரிவித்துள்ளன.

வராது என அரசு கருதுகிறது.

இவ்வருடத்திற்கான றப்பர் அரிசி ஒப்பந்தத்திற்கு புறம்பான முறையில் ஏப்ரல் மாதம், மேலதிகமாக 20,000 தொன் றப்பர் வழங்க வேண்டுமென செய்யப்பட்ட முடிவை வற்புறுத்த வேண்டுமென இலங்கை சீனவிடம் கோரியுள்ளது. வெளி மார்க்கட்டில் இந்த றப்பரை விற்பதுதான் நோக்கம். இதன்மூலம் அந்நிய செலாவணியை சேர்த்து அரிசிக்கும், மற்றும் உணவு வகைகளுக்கும் செலவிடுவதற்கு வழி செய்யலாம்.

கொலையுண்ட கண்டக்டருக்கும், குழுமுனையிலுள்ள கல்லூரி மாணவி ஒருவருக்குமிடையில் காதல் தொடர்பு இருந்துவந்ததாகவும், இரு ... து பெற்ருேர்களும் இவர்களின் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்திருந்ததாகவும், குழுமுனையில் உள்ள மாணவியின் சொந்தக்காரர் சிலர் இத்திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மாணவி சாட்சியமளித்ததைத் தொடர்ந்து கிராம சபைத் தலைவரும், ஆசிரியரும், மற்றும் இருவரும்

யானைக்குட்டி பரிசு?

பளை புதன்

ஒட்டிசுட்டான் விவசாயப்படை வீரர்கள் பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணி அமோக வெற்றியீட்டியதை யொட்டி பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு யானைக்குட்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர், வடபகுதியிலிருந்து முதன் முதலாகப் பிரதமருக்கு கிடைக்கும் அன்பளிப்பான இந்த யானை 410 ருத்தல் எடையும் 3 அடி உயரமுமுடையது.

நயினைதீவு யாத்திரை

## படகுகளில் அளவுக்குமீறி பிரயாணிகளை ஏற்ற வேண்டாம்

### பொலிசார் கடும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

நயினைதீவுக்கு யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்களை மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளுமாறு பொலிசார் கேட்டுக்கொண்டுள்ளனர். கடல் கொந்தளிப்பாக இருப்பதால், படகுகளில் அளவுக்கு மிஞ்சிய பிரயாணிகளை ஏற்றிச் செல்லவேண்டாம் என்றும், சட்டத்தை மீறும் படகுச் சொந்தக் காரரின் 'லைசென்ஸ்' ரத்துச் செய்யப்படும் என்றும் பொலிசார் எச்சரித்துள்ளனர்.

ஒழுங்கைமீறி வள்ளங்களில் பிரயாணஞ் செய்வோருக்கும், அதிக பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் வள்ளச் சொந்தக் காரருக்கும் கடும் தண்டனை கிடைக்கும் என்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. இராசையா தெரிவித்துள்ளார்.

கட்டுப்பாடற்ற முறையில் பிரயாணஞ் செய்பவர்களால் அபாயம் ஏற்படக்கூடும் என்பதற்காகவே பொலிசார் இவ்வித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

## வேலை இழந்த சகலருக்கும் சம்பளத்துடன்மீண்டும்வேலை

### அரசாங்கம் நடவடிக்கை

கோட்டை, புதன்

கடந்த அரசாங்கத்தில் தற்காலிக வேலை நீக்கஞ் செய்யப்பட்டவர்களின், குற்றச்சாட்டுக்களை மறு பரிசீலனை செய்வதற்கு புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்காலிக வேலைநீக்கஞ் செய்யப்பட்டு, பல வருடங்களாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருக்கும் ஊழியர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்படாத பட்சத்தில் அவர்களுக்கு மீண்டும் வேலைவழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது நிறுத்திவைக்கப் பட்டிருந்த காலத்துக்குரிய சம்பளமும் அவர்களுக்குக் கிடைக்கும்.

## உடுப்பிட்டி எம். பியின் முன்னறிவித்தல்கள்

வல்வெட்டித்துறை, புதன்

உடுப்பிட்டி எம் பி திரு. கே. ஜெயக்கொடி ஆட்சி மன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கும்படி பின் வரும் முன்னறிவித்தல்களைக் கொடுத்திருக்கின்ருர்.

உடுப்பிட்டித் தொகுதியில் இருப்பதற்கு நிலமில்லாத சிறுபான்மை மக்களுக்கு முடிக்குரிய காணிகளையும், மற்றும் தனியாரிடமிருந்து பெற்றும் அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பனம்பொருள் ஆராய்ச்சி நிலையமொன்று வட பகுதியில் நிறுவவேண்டும். வல்லிபுரக் கோயிலில் கண்ணுடி உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும். கருப்பநீர் இறக்குவதற்கான லைசென்ஸ் வரியை உடனடியாக நீக்கவேண்டும். அரசாங்க பாடசாலைகளில் மாணவரிடமிருந்து பெறும் பணத்தின் அளவுடன் அரசாங்கத்தால் எடுக்கப்படாத பாடசாலைகளில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கும் பணத்தின் அளவை சமப்படுத்த வேண்டும்.

### வெங்காயச் செய்கை பாதிக்கலாம்

மட்டுவில் புதன்

அண்மையில் பெய்தகடும் மழை காரணமாக விளைவேலிப்பகுதியில் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தாகக்குறைபட்டுக் கொள்ளுகின்றனர், விவசாயிகள்.

வெங்காயச் செய்கைக்கென சீர்படுத்திவைத்திருந்த நிலங்களில் இப்பொழுது தண்ணீர் தேங்கிநிற்பதின் காரணமாகவே வெங்காயச் செய்கைபாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள்கூறிக் கொள்ளுகின்றனர்.

இன்னும் ஒரு வாரத்தினுள் வெள்ளம் வற்ருதநிலை ஏற்படுமேயாளுல் உண்மையில் இந்தப் போகத்திற்கு வெங்காயச் செய்கையை கைவிட வேண்டியதுதான் என்றும் கூறினர்.

## எஞ்சினியர்களின் தேசப்பற்று: பீட்டர் கெனமன் பெருமகிழ்ச்சி

கொழும்பு, புதன்

இளம் பொறியியலாளர்கள் காட்டும் ஆர்வமும் தேசப்பற்றும் தம்மைப் பெரிதும் கவர்ந்து விட்டதாக வீடமைப்பு அமைச்சர் திரு, பீட்டர் கெனமன் தெரிவித்திருக்கிருர்:

இந்த இளஞர்கள் ஒற்றுமையாகவும் தேசப்பற்றுடனும் தம்கடமைகளைப் புரிகிருர்கள் என்று திரு. பீட்டர் கெனமன் குறிப்பிட்டார்

தேசிய பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு விஜயம் செய்த பொழுது திரு. பீட்டர் கெனமன் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

### பஸ் விபத்தில் சிக்கியவர் படுகாயம்

யாழ்ப்பாணம், வியா.

பஸ்ஸை எதிர்பார்த்து யாழ். பஸ் நிலையத்தில் நின்ற பிரயாணி ஒருவர் பஸ்ஸில் சிக்கி படுகாயம் அடைந்துள்ளார்.

கால்களில் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தப் பிரயாணியின் தலையிலும் காயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### மக்கள் செயற் குழுக்கள்

தபால் அமைச்சின் பல்வேறு பிரிவுகளிலும் ஆலோசனைகள் கூறுவதற்கு மக்கள் செயற் குழுக்களை நிறுவுவதற்கு தபால் தொடர்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் முடிவு செய்திருக்கிருர்,

தபாற் சேவையில் சீர்திருத்தங்கள் செய்வது சம்பந்தமாகவும், மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்கள் பற்றியும் இந்தக் குழுக்கள் ஆலோசனைகள் கூறுவதாயிருக்கும்.

### கறுவா ஆராய்ச்சி சபை

கறுவா ஆராய்ச்சிநிலையம் ஒன்று நிறுவப்படுமென்று தோட்டத் தொழில்துறை அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா தெரிவித்திருக்கிருர்.

## தமிழ் மந்திரி, எம். பிக்கு யாழ். நகரில் வரவேற்பு

யாழ்ப்பாணம், வியா,

கூட்டரசாங்கத்திலுள்ள தமிழ் மந்திரிக்கும் தமிழ் நியமன எம். பி.க்கும் விரைவில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்திற் பொதுவரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன

தபால் மந்திரி திரு. எஸ். குமாரசூரியருக்கும், நியமன எம். பி. திரு. எம் சி சுப்பிரமணியத்திற்கும் நியமன எம் பி. திரு. ஏ. அசீஸிற்கும் பொது வரவேற்பளிக்கப்படவிருக்கிறது.

இப்பொது வரவேற்பையொட்டி பிரமாண்டமான இரு ஊர்வலங்களையும் நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது

முக்கூட்டுக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை இஸ்லாமிய சோஷலிஸ முன்னணி ஆகியவை சேர்ந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன

இப்பொதுவரவேற்பில் கூட்டரசாங்கத்தைச் சேர்ந்த சில எம். பி.க்களும் கலந்துகொள்வர்

## உருளைக்கிழங்கு இறக்குமதி இல்லை

கோட்டை, புதன்

வெளிநாடுகளிலிருந்து உருளைக் கிழங்கு இறக்குமதி செய்வதை அரசாங்கம் நிறுத்திவிட முடிவு செய்திருக்கின்றது.

வெளிநாடுகளிலிருந்து உருளைக்கிழங்கு இறக்குமதி செய்யப்படுமென்ற தவருன செய்தியினுல் இலங்கை விவசாயிகள் உற்சாகமிழந்துள்ளனரென்று விவசாய இலாகா அதிபர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

உருளைக்கிழங்கு உற்பத்திக்கு ஊக்கம் ஊட்டும் வகையில் விவசாயிகளுக்குவிதைக் கிழங்கு வழங்கவும் விவசாயப்பகுதி ஏற்பாடு செய்யுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கைதானவர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், வியாழன்

கடந்த 9 மாதங்களாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த ஒருவர் நேற்றுப் பொலிஸாரிடம் அகப்பட்டுக்கொண்டார். கைதுசெய்யப்பட்ட சின்னச்சாமி சுப்பிரமணியம் அல்லது சின்னையா என்பவரை யாழ்ப்பாணப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த திரு. எ. ஈ. இரத்தினம் கைதுசெய்து யாழ்ப்பாண மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்தார்: நீதிபதி 20 ரூபா அபராதம் விதித்து இரண்டு வாரச் சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்:

மாதாமாதம் பொலிஸில் கையொப்பம் இடவேண்டிய இவர் கடந்த 9 மாதங்களாகக் கையொப்பம் வைக்காததாலேயே இவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்:

### இன்று சிறுவர் கலைவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். வண்ணை விவேகானந்த சிறுவர் கலைவிழா இன்று மாலை யாழ்ப்பாணத் திறந்தவெளியரங்கில் நடைபெறும்.

திரு. சி. தியாகராஜாவின் தலைமையில் நடைபெறும் விழாவில் சிறுவர் கலைமன்றங்களும், வயதுவந்தோர் மன்றங்களும் கலைநிகழ்ச்சிகளில் பங்குகொள்ளவுள்ளன:

### காலமானர்

பண்டத்தரிப்பு, புதன்

இளவாலைபுனித என்றியரசர் கல்லூரி ஆசிரியர் திரு. வி: கந்தையா காலமானர். இவர் மேற்படி பாடசாலையின் உபஅதிபராகவும் இருந்தவர் இவரின் மறைவு குறித்து பாடசாலை அரைநாள் விடுமுறை அளிக்கப்பட்டது. பாடசாலை உடன் ஆசிரியர்களும் மாணவர்களும் ஈமச்சடங்குகளில் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

2 பரப்பு குடிநிலம், புரோசனத்துடன் 91/A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், தொடர்பு: இராசரத்தினம், வழக்கறிஞர், சிவப்பிரகாசம்ரேட்டு, யாழ்ப்பாணம். 2135

வீடு கட்ட காணிநிலம் யாழ்ப்பாணம் கொட்டடி வயிரவர் வீதியில் டாக்டர் சிவசோதியின் வீட்டுக்கருகில், 4 பரப்பு 17 குளி. கிணறு அரைவாசி. மின்சார வசதியுண்டு. விலை பரப்பு ரூபாய் 8250/க்கு மேல். 54, நீர்கொழும்பு ரேட்டு, குருநாகல். 2282

### காணவில்லை

8-ந் திகதி இரட்டைத் தட்டு பஸ் மேல் பகுதியில் சிவப்புக் கவருடன் கூடிய மூக்குக்கண் றுடி ஒன்று தவறிவிட்டது. கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். விஜயேந்திரன், 150, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2137

### வகுப்புக்கள்

பாமஸிஸ்ற்:

வெளி மாணவர்களுக்கான பாமஸிஸ்ற் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. விபரங்களுக்கு விக்னேஸ்வரன், 7, பழம்ரேட், யாழ்ப்பாணம். 2303

### கல்வி

ஜீ. சீ. ஈ. கலை/விஞ்ஞான வர்த்தக/சிங்கள (காலை மாலை) வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, யாழ்ப்பாண டியூடோறியல் கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2292

கடந்த மார்கழி க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் கலை, விஞ்ஞான பாடங்களிலும் சுருக்கெழுத்து, தட்டச்சு (ஆங்கிலம்/தமிழ்) கணக்கியல், வர்த்தகவியல், வர்த்தக எண்கணிதம், பொருளியல், ஆங்கிலம், சிங்களம், தையல் ஆகிய பாடங்களில் அதிகமானோர் விசேட சித்தியும், திறமைச் சித்தியும் பெற்றுள்ளார்கள் வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 2298

சித்தி நிட்சயம் ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல். பகல் வகுப்புகளுக்கு பிரவேசங்

## கேள்வி விளம்பரம்

### உடுப்பிட்டிக் கிராமச் சபை

1. முக்காத்தை வளவு வீதி.
2. ஊறெல்லை. கிராம பத்தனை வீதி.

மேலே சொல்லப்பட்டிருக்கும் இரு வீதி வேலைகளுக்கு 1970-ம் ஆண்டு ஆனி மாதம் 25-ந் திகதி காலை 9-30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 23-6-70 பி. ப. 2-30 மணி வரை மேற்படி சபை அலுவலகத்தில் தனித் தனி ரூபா 25/- கேள்விப்பணமாகவும் ரூபா 15/- பத்திரப்பணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரம் சபை அலுவலகத்திலும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

இ. இ. தர்மரத்தினம்,
அக்கிராசனர்,
கிராமச்சபை,
உடுப்பிட்டி,
8-6-70. 2307

### திருமண அழைப்பு

மணமகன்: மு. கனகலிங்கம். மணமகள்: த. கிருஷ்ணமணி, நாள்: 11-6-70 வியாழன். கடுக்கண் பூணல்: காலை 7 மணி; மங்கல நாண் பூட்டல்: பகல் 12 மணி. மணமகன் இல்லம்: இல. 4, கேசாவில் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். மணமகள் இல்லம்: சு. தம்பாபிள்ளை, அம்மன் கோவிலடி, வேலம்பிராய், தச்சன்தோப்பு நண்பர்களும் உறவினர்களும் தயவு செய்து இவ் அழைப்பை ஏற்றுக்கொள்ளவும். தனிப்பட்ட அழைப்பு இல்லை. 2302

### வேலை தேவை

சிறந்த கணக்கு வைப்பு இலிகிதரும், காசாளரும், சிறந்த ஓவியருமான ஒருவருக்கு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் உள்ள புகைப்பட ஸ்ரூடியோவில் அல்லது மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்குத் தகுதியான எந்தத் தொழில் நிறுவனங்களிலோ வேலை தேவை. ஸ்ரூடியோக்கள் தொழில் வழங்க முன்வந்தால் பிணைப் பணமாக ரூபா 1500/- கட்டலாம். சம்பளத்தை அறிவிக்கவும். விளம்பர

# 'தியாகி கந்தசாமி கனவு இன்று நனவாகிறது'

யாழ்ப்பாணம், வியா.

"தோழர் கந்தசாமி தொழிலாளர் மீது தொடுக்கப்பட்ட அடக்குமுறைக்கெதிராக இலங்கைத் தொழிற்சங்கங்கள் நடாத்திய போராட்டத்தில்கலந்து கொண்டு தன்இன்னுயிரை தொழிலாள வர்க்கத்துக்கும் தொழிற்சங்க இயக்கத்துக்குமாக அர்ப்பணித்தார். இவர் தமிழ்மகனுகஇருந்தபோதும் இன்று இந்நாட்டிலுள்ள சகல இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களாலும் முற்போக்குச் சக்திகளாலும் மதிக்கப்படுவதற்குக் காரணம் அவர் குறுகிய தொழிலாளிவர்க்கப் பிரிவுப்பாதையான சாதி, மத பேதத்தை ஒதுக்கி இந்நாட்டில் சிங்கள-தமிழ் தொழிலாளர்களோடு சேர்ந்து போராடியதே"

1947-ம்ஆண்டில் தொழிற் சங்கப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகி கந்தசாமியின் 23-வது நினைவு தினவிழாவில் கலந்து கொண்டுபேசிய நியமன எம். பி. திரு. எம். ஸி. சுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

அரசாங்கலிகிதர் சேவைச் சங்க யாழ். கிளை தியாகி கந்தசாமி நினைவுதினத்தைக் கொண்டாடியது சங்கத் தலைவர் திரு. ஈ. சிவசோதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. எம். ஸி. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில், "தொழிலாளவர்க்கத்துக்கு தோழர் கந்தசாமி செய்தசேவை வீண்போகவில்லை. அன்று அவர்கண்ட கனவு இன்று நனவாகி வருகின்றது. இந்நாட்டில் ஒரு முற்போக்கு அரசாங்கம்ஏற்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் தொழிலாள வர்க்கத்தினரின் உரிமைகளைக் கொடுக்கும். புதிய அரசாங்கத்தில் சகல இனத்தைச் சேர்ந்த மக்களும் அங்கம் வகிப்பதால், எல்லோரது உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்று நிச்சயம் நம்பலாம்,

சுன்னுகம் பட்டனசபைத் தலைவர் திரு. பி. நாகலிங்கம் பேசும்போது கூறியதாவது: தோழர் கந்தசாமி இந்நாட்டின் வரலாற்றிலும் தொழிற்சங்கவரலாற்றிலும் முக்கிய ஒருவராவர் அவர் அன்று தொழிலாளவர்க்க அடக்குமுறைக்கெதிராக நடாத்திய ஊர்வலத்தில் முன்னணியில்சென்றார். அவருடன் அவ்வூர்வலத்தில் இன்று மந்திரிசபையில் அங்கம்வகிக்கும் ரி. பி. இலங்கரத்ன, என். எம் பெரேரா, பீட்டர் கெனமன், கொல்வின் ஆகியோரும் கலந்து கொண்டனர். (கு. வி ம)

0 0 0

# 'குடித்துவிட்டு எம்மை வதைப்பதே அவர் தொழில்'

## ஜீவனும்சம் கோரிய மனைவி கோர்ட்டில் சாட்சியம்

மட்டுவில், புதன்

'குடித்துவிட்டு கூத்தாடுவதும், எம்மைப் போட்டு அடிப்பதும் வருத்துவதுமே எனது கணவருடைய செயலேயன்றி, எமது வாழ்க்கை கஷ்டத்தைப் போக்க எது விதமான தொழிலும் செய்வதே கிடேயாது. எனவே எனது ஏழு பிள்ளைகளுக்கும் எனக்கும் வாழ்க்கைக்குப் படி பெற்றுத்தர வேண்டும் ஐயா!

இவ்வாறு மட்டுவில் தெற்கை சேர்ந்த தாய் ஒருவர், தனது கணவர் மீது தாக்கல்செய்த ஜீவனும்ச வழக்கின்போது, சாவகச்சேரி மஜிஸ்திரேட் முன்னிலையில் கூறினார். இந்த வழக்கில், பத்துப் பிள்ளைகளின் தாயான இவர்ளும் அவருடனும் நான் பட்ட கஷ்டங்கள் போதும். இனிமேலும் என்னுல், அடி உதை வாங்க முடியாது. எனவே நானும் பிள்ளைகளும் இனிமேல் தனித்திருந்து எமது ஜீவியத்தை நடத்துவதே மேல்.

கணவர் தனதுஉழைப்பை எல்லாம் வீணுகக் குடித்துத் தள்ளுகிறார். அவர் அப்படி இப்படியென்று எப்படியும் மாதம் 200 முதல் 300வரை சம்பாதிக்கிறார் இதில் எனக்கும் பிள்ளைகளுக்கும் 100 ரூபா ஜீவனும்சம் கொடுக்கட்டும், நாம் ஒதுங்கிக் கொள்கிறோம். இனி மேலும் எமக்குள் இந்தத் துயர் வேண்டாம்' என்றார்.

மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம் மாதம் 20ம்

# சேக்கிழார்விழா பெரியபுராண பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

சேக்கிழார் விழாவையொட்டி அகில இலங்கை சேக்கிழார் மன்றம் கல்லூரி மாணவர்களுக்கிடையில் நடத்திய பெரியபுராண பரீட்சை போட்டியில் மகாஜன கல்லூரி, ஜூனியன் கல்லூரி மாணவ மாணவிகளே அதிக பரிசில்கள்பெற்றுள்ளனர். சேக்கிழார் மன்றத் தலைவர் திரு. எம். ஸ்ரீ காந்தா பரிசுபெற்றவர்களை பாராட்டி, அவர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

### பரிசுபெற்றவர்களின் விபரம்:

மேற்பிரிவு: 1. தங்கப்பதக்கம் (நாவலர் சபை வழங்கியது) செல்வி கந்தையா சுபத்திராதேவி-ஜூனியன் கல்லூரி.

2. தங்கப்பதக்கம் (மில்க்வைற் ஸ்தாபனம் வழங்கியது) செல்வி சபாரத்தினம் மாலினி மகாஜன கல்லூரி.

3. தங்கப்பதக்கம் (நாவலர் சபை வழங்கியது) செல்வி சின்னத்துரை நவநிதி-ஜூனியன் கல்லூரி.

1-ம் பிரிவு பெரியபுராணம் பரிசுபெற்றவர்கள் செல்வன் சிவபாலன் கிருஷ்ணன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, செல்வி சங்கரப்பிள்ளை கமலாதேவி- யூனியன் கல்லூரி, செலவன் கனகசபை குகநேசன் மகாஜன, செல்வி சின்னத்துரை அம்பிகா தேவி, யூனியன், செல்வி உமாமகேஸ்வரி இளையப்பா மகாஜன, செல்வன் பொன்னம்பலம் யோகேஸ்வரன் யூனியன் கல்லூரி.

2-ம் பிரிவு தராதரப்பத்திரம் பெற்றவர்கள் செல்வன் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் யூனியன், செல்வன் கிருஷ்ணபிள்ளை தேவராசா யூனியன், செல்வி பூரணம் காஞ்சியன் மகாஜன, செல்வி தங்கேஸ்வரி கந்தையா. மகாஜன.

கீழ்ப்பிரிவு 1. தங்கப் பதக்கம் (வைத்தியர் கஸ்தூரி முத்துக்குமாரு குடும்பத்தினர் வழங்கியது) செல்வன் பொன்னம்பலம் இரகுபதி- யாழ். இந்துக்கல்லூரி.

2. தங்கப்பதக்கம் (சேக்கிழார் மன்றம் வழங்கியது) செல்வி வேலுப்பிள்ளை கலாவதி யூனியன்.

3 தங்கப்பதக்கம் (யாழ் ரன்ஸ்ரோர்ஸ் வழங்கியது) செல்வி நிருபாராஜசிங்கம் மகாஜன.

1-ம்பிரிவு பெரியபுராணம் பரிசுபெற்றோர்: செல்விசெல்லத்துறை கமலாதேவி யூனியன், செல்வன் பாண்டியன் உருத்திராமூர்த்தி மகாஜன

2-ம் பிரிவு தராதரப்பத்திரம் பெற்றோர் செல்வி விஸ்வலிங்கம் தவமணி யூனியன், செல்வி நவரத்தினம் நிர்மலாதேவி யூனியன், செல்வி மகாலிங்கம் விமலா யூனியன், செல்வி மிராணி சின்னத்தம்பி மகாஜன, செல்வன் ஸ்கந்தராசா சிங்கராசா மகாஜன.

— —

## கள்ளுக்கொட்டில் தீக்கிரை

சுழிபுரம், புதன்

கடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து இப்பகுதிகளில் உள்ள சில கள்ளுக்கடைகொட்டில்களும் தனிப்பட்டவர்களின் ஓலைவேலிகளும் தீக்கிரையாகியுள்ளன. இச் சம்பவங்கள் சம்பந்தமாக சங்கானை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளன

— —

## திருநாள்

வல்வெட்டித்துறை, புதன்

பருத்தித்துறை - தூய அந்தோனியார் நவநாள் இம் மாதம் 1-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. 12-ம் திகதி கடைசி நோவினையும், சுற்றுப்பிரகாரமும், மறுநாட் காலை திவ்விய பாடற் பூசையும் நடைபெறும். வண-பிதா-எம். சுவாம்பிள்ளை ஆராதனைகளைச் செய்துவைப்பார்.

— —

## ராஜபக்சவுக்கு வாழ்த்து

யாழ்ப்பாணம், வியா

சென். நீக்கலஸ் கடல் அட்டை ஐக்கிய சங்கம்கடல் தொழில் மந்திரியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ஜோஜ் ராஜபக்சாவுக்கு வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளது.

தொடர்ந்து நல்ல சேவை செய்ய வாழ்த்துவதாக அவ் வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# கூட்டுறவு இயக்கத்தினர் அரசியலில் ஈடுபடக்கூடாது

## சட்ட ரீதியாகத்தடை செய்ய வேண்டுமென கோரிக்கை

பருத்தித்துறை, புதன்

"கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டிருப்போர் அரசியல் பேசுவதாலும், அரசியலிற் கலந்து கொள்வதாலும் கூட்டுறவு இயக்கம்பாதிக்கப்படுவதுடன், நுகர்வோருக்குச் சேவைபுரிவதிலும் பாரபட்சம் தலைதூக்கலாம் எனவே, கூட்டுறவு நிறுவனங்களிற் கடமையாற்றுவோர், அரசியலில் தலையிடுவது சட்டரீதியாகத் தடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது"

இவ்விததீர்மானம் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற வதிரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவரின் பொதுக்கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டு மேற்படி சங்கச் செயற்குழுவுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

திரு. ஏ. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திருதாளர்கள் கே. இரங்கநாதன், ஏ. இராசரத்தினம் ஆகியோரும் விவாதத்திற் கலந்து கொண்டனர். இவ்வித தீர்மானம் வடமராட்சிப் பகுதியிலுள்ள பிற கூட்டுறவு நிறுவனங்களிலும் நிறைவேற்றப்படலாமெனத் தெரிகிறது.

— —

## சமயகுரவர் விழா

கரம்பன், வியாழன்

இன்று கரம்பன் இந்து மாமன்றத்தின் ஆதரவில் சமய குரவர்விழா கரம்பன் சண்முகநாத மகாவித்யாலய மண்டபத்தில் புலவர்மணி திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை தலைமையில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் திரு. க. சிவராமலிங்கம் திரு. ச. விநாயகமூர்த்தி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் விரிவுரையுடன் பூசை, திருமுறை ஓதல், மாணவர்பேச்சு ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## ஊழியர்கள் கவலை

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை மின்சாரசபை நாளாந்த ஊழியர்கள் தமது சம்பள விடயமாகக் கவலை கொண்டுள்ளனர்

இவர்களது சம்பளம் நிரந்தர ஊழியர்கள் பெறும் திகதியில் வழங்கப்படுவதில்லையாம்

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் மின்சார சபை நாளாந்த சம்பள பெறும் ஊழியர்கள் அதிகாரிகளிடம் முறைப்பட்டபோது அவர்கள் மேலிடத்து நடவடிக்கையை மீற முடியவில்லையெனத் தெரிவித்துள்ளார்களாம். (கு வி ம)


# இலங்கை குடும்பத் திட்டச் சங்கம்

பிள்ளைகளை எவ்வெப்போது பெறுவது என திட்டம் இடுங்கள். அப்போதுதான் அவர்களுக்கு சகலவிதமான நன்மைகளையும், வசதிகளையும் உங்களால் கொடுக்க முடியும். இந்தச் சலுகை பணக்காரர்களுக்கு மட்டும் உரியதல்ல! எல்லோருக்கும் பொதுவான வசதி இது.

தனிப்பட்ட, அந்தரங்கமான விபரங்களுக்கு:-

**தலைமைக் காரியாலயம்:**
23/5, ஹோர்டன் பிளேஸ்.
கொழும்பு-7
தொலைபேசி: 92354.

**தகவல் பகுதி:**
457, காலி வீதி,
கொள்ளுப்பிட்டி,
தொலைபேசி: 85189.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சித்தி நிட்சயம் ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பிரவேசம், சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல். பகல் வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்கப்படுகின்றன. யூனைட்டெட் மகளிர் கல்லூரி, நெல்லியடி. 2296

...த் தொழில் நிறுவனங்களிலோ வேலை தேவை. ஸ்ருடியோக்கள் தொழில் வழங்க முன்வந்தால் பிணைப் பணமாக ரூபா 1500/- கட்டலாம். சம்பளத்தை அறிவிக்கவும். விளம்பர இல. 2301, C/o 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம். 2301


**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்—கே.ஆர்.விஜயா
நாகேஷ்—வி கே. ராமசாமி
நடித்த
**பெண்ணை வாழ விடுங்கள்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி4 காட்சி
எம்: ஜி: ஆர்.
பத்மினி
நடித்த
**மன்னாதி மன்னன்**
(புதிய கொப்பி

இப்பொழுது திரையிடப்படுகிறது
**வெலிங்டன்** யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
**எம்.ஜி.ஆர். ஜெயலலிதா**
**நாகேஷ் ரெங்கராவ்**
மற்றும் பலர் நடிந்த


...தாய் ஒருவர், தனது கணவர் மீது தாக்கல்செய்த ஜீவனாம்ச வழக்கின்போது, சாவகச்சேரி மஜிஸ்திரேட் முன்னிலையில் கூறினார்.

இந்த வழக்கில், பத்துப் பிள்ளைகளின் தாயான இவர் ஏழு பிள்ளைகளுக்கு மட்டுமே ஜீவனாம்சம் கோரி சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே.விக்னராஜா முன்னிலையில் தாக்கல் செய்திருந்தார்.

மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராஜா வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது, வாதி மேலும் சாட்சியத்தில் கூறியதாவது:

எனது கணவர் சதா குடிப்பது தான் வேலை, குடித்துவிட்டு இரவு வீடு திரும்பியதும் சதா என்னையும் பிள்ளைகளையும் அடிப்பதுதான் அவர் நித்திய கடமைகளில் ஒன்றாகும். இத்தனை பிள்ளைக... ரூபா ஜீவனாம்சம் கொடுக்கட்டும், நாம் ஒதுங்கிக் கொள்கிறோம். இனி மேலும் எமக்குள் இந்தத் துயர் வேண்டாம்' என்றார்.

மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம் மாதம் 20ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வியாவட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி 12-ம் திகதி பி. ப. 2-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அதிபர் பி.இராஜகுரு தலைமையில் இவ்விளையாட்டுப்போட்டி நடைபெறும். 0 0 0

மாவிட்டபுரம், வியாழன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு போட்டிகள் நாளை நிகழ இருக்கின்றன.


**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
ஜெமினி -சரோஜாதேவி
நடித்த
**குலவிளக்கு**

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
நடித்த
**நான் ஆணையிட்டால்**

**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Charles Bronson
&
Hentry Fonda
in
ONCE UPON A TIME IN THE WEST
(color)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
Daily 3 Shows
Poya, Pre-poya 4 Shows
DEVIL IN THE FLESH

**REGAL** JAFFNA
Daily 3 Shows
Poya Prepoya 4 Shows
Mark Damon & Sally Smith
in
THE YOUNG, THE EVIL AND THE SAVAGE
(Adults only)


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.


மாலை4-25கல்விஒலிபரப்பு 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-10 மெல்லிசை, 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன் ஒட்டுசுட்டான் முத்தையன் குளம் ஸ்ரீ விநாயகர் கோயில்நாதனப் பிரதிஸ்டா மகாகும்பாபிஷேகம் இம் மாதம் 10-ந்திகதிதொடங்கி 14-ம் திகதி மகேஸ்வர பூஜையுடன் முடிவடையும்.

திரு. ம. ஸ்ரீகாந்தா தலைமையில் கும்பாபிஷேக விழா நடைபெறும். (கு.வி.ம.)

**உங்கள் வெங்காயம் மிளகாய்த் தாவரங்களைத் தாக்கும் களைகளைக் கட்டுப்படுத்த செலவு என்னவாகிறது?**




'பிளனவின்' பாவிப்பின் ஏக்கருக்குச் செலவு ரூ. 50/- மட்டுமே! ஏனைய களைக் கொல்லிகள் பாவனைச் செலவில் அரைவாசி இது.

'பிளனவின்' ஓர் புதிய களைக் கொல்லி. சகல களைகளையும் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல விளைச்சலையும் பெருக்க வல்லது. விசேஷமாக வெங்காயம், மிளகாய் மற்றும் சிறுதுணை உணவுத்தாவரங்களைத் தாக்கும் களைக் கட்டுப்பாட்டிற்கும் சிறந்தது.

**உங்கள் செலவை அரை மடங்காக்கி இலாபத்தை இருமடங்காக்க 'பிளனவின்' பாவியுங்கள்!**

**லங்கெம் இலங்கை லிமிட்டெட்**
சிலிங்கோ கட்டிடம் த. பெ. 919 கொழும்பு.
டெலிபோன்: 28333

இரசாயனங்களை நினையுங்கள். லங்கெம்மை நினையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்டான் மன்னர் மயிரிழையில் உயிர் தப்பினர்; தளபதி பலி

## அரபு கொமாண்டோக்கள் - அரச துருப்புக்கள் கடும் சண்டை

### பொது மக்கள் பலர் மாண்டனர்

அம்மான், ஜூன் 10

ஜோர்டான் மன்னர் ஹுசெயின் நேற்று மயிரிழையில் உயிர்தப்பினர். அவரைக் கொலைசெய்ய நடந்த முயற்சி தோல்வியடைந்தது. மன்னர் சென்ற கார் மீது பல தடவைகள் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது. மன்னர் உயிர் தப்பினர். ஆனல் மன்னரின் உறவினரானபடைத்தளபதி மேஜர் ஜெனரல் துப்பாக்கிக்குண்டுபட்டு மாண்டார்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த அரபு கொமாண்டோக்களுக்கும் ஜோர்டான் துருப்புக்களுக்குமிடையில் ஜோர்டான் தலைநகரான அம்மானில் நேற்றுப் பலமணிநேரம் சண்டை நடைபெற்றது. இச் சண்டையை நிறுத்துவதற்காகப் பெரும்முயற்சி நடைபெற்றது. அந்த முயற்சி ஓரளவு வெற்றியளித்ததும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மன்னர் ஹுசெயின் அம்மானுக்குச் சென்றுகொண்டிருக்கையிலேயே அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது.

அரபுக் கொமாண்டோக்களுக்கும் ஜோர்டான் துருப்புக்களுக்குமிடையில் நடைபெற்ற சண்டையில் இருதரப்பினருக்கும் ஆட்சேதம் ஏற்பட்டது. இது தவிர இருதரப்பினரும் நடத்திய தாக்குதல்களில் பொதுமக்கள் பலர் மாண்டனர்.

# மக்கள் அரசில் பகைமைக்குஇடமில்லை

இரத்தினபுரி, புதன்

புதிய சகாப்தத்தைப் படைக்க விரும்பி ஐக்கிய முன்னணி அரசு அமைக்க மக்கள் வாக்களித்தனர். ஆகையால், அக்குறிக்கோளை அடையும் வழியில் அரசாங்கம் செயல்பட வேண்டும், என இரத்தினபுரி டிப்போவில் இ. போ. ச. ஊழியர்களால் தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் இரத்தினபுரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. நந்தஎல்லவல கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: மக்கள் ஒத்துழைப்பின்றி எந்த அரசாலும் மக்களுக்கு நல்லதைச் செய்ய முடியாது.

மக்களின் முழு ஆதரவைப் பெற்று வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் மக்கள் அரசாங்கமேயாகும். எனவே, இந்த அரசாங்கத்துக்கு மக்கள் தம் ஒத்துழைப்பைக் கொடுத்து, கடுமையாக உழைக்க வேண்டும்.

மே 27 மக்கள் தினத்தின் தொடக்க மேயாகும். இதன் முழு வெற்றி, மக்களுடைய தேவைகள், விருப்புக்கள் நிறைவேற்றப் படும்பொழுதே முழுமையடையும்

கடந்த 5 ஆண்டுகளாக நாடு மிகவும் சீர்கெட்டு விட்டது. ஆகையால் அதனைச் சீர்படுத்துவதற்கு மிகவும் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கிறது. தேர்தல் முடிந்து விட்டது. நமக்குள் இருக்கும் வேற்றுமையில் அரசாங்கம் அமைக்கப் படவில்லை. எல்லா மக்களுக்காகவுமே இம் மக்கள் அரசாங்கம் அமைக்கப் பட்டது.

ஆகையால், எமக்குள் இருக்கும் அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டு நலனுக்கு ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும்.

இ. போ. ச. ஊழியர்களை குறிப்பிட்டு அவர் பேசுகையில்: போக்குவரத்துச் சேவையை தேசிய மயமாக்குவதற்கு முன்பு தொழிலாளர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்காதான் முதலாளிகளின் பிடியிலிருந்து பஸ் தொழிலாளர்களை மீட்டார். கடந்த சில காலங்களில் தவருன வழி நடத்தலினால் இ. போ. ச 45லட்சம் ரூபாவை இழந்திருக்கிறது. ஐ. தே. கட்சி நிர்வாகத்தின் கீழ் துன்பத்தை அனுபவித்த தொழிலாளர்களுக்கு முடிந்த அளவு உதவிகள் செய்யப்படும்

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட சில சம்பவங்களைக் குறிப்பிட்டு அவர் ஐக்கிய முன்னணிக்கு களங்கத்தை ஏற்படுவதற்கு மக்கள் பகைவர்கள் செய்யும் சூழ்ச்சியாகுமெனக் கூறினர்.

## 'சௌக்கியத்தைப் பேண மக்கள் ஒத்துழைப்பு அவசியம்'

ஊர்காவற்றுறை, புதன்

சுகாதார வாரத்தையொட்டி ஊர்காவற்றுறைப் பகுதியில் சௌக்கிய இலாகா சுகாதகர சொற்பொழிவுகளையும் கருத்தரங்கங்களையும் ஆரம்பித்துள்ளன.

ஊர்காவற்றுறை அரசாங்க வைத்தியசாலை வைத்திய ஊழியர்கள்இவ் வாரம்பூராவும் விசேஷ பயிற்சி பெறுகிறார்கள். இதைவிட ஊர்காவற்றுறை சுகாதார காரியாலயம் சுகாதார விடயங்கள் பற்றிய கட்டுரைப் போட்டியொன்றையும்பாடசாலைகளுக்கிடையே நடாத்துகிறது.

மக்கள் தங்கள்வீடுகளையும் அந்தப்புரங்களையும் சுத்தம் செய்ய சௌக்கியப் பகுதியுடன் சேர்ந்து ஒத்துழைப்ப [illegible]

சுகாதார வாரத்தின் இறுதி விழாக் கொண்டாட்டங்கள் ஊர்காவற்றுறைத் தொகுதியில் புங்குடுதீவில் இன்று நடைபெறுகிறது. ஊர்காவற்றுறை வேலணை காரைநகர் ஆகிய இடங்களில் நாளையும் நடைபெற விருககின்றன.

## பச்சிலைப்பள்ளி செய்திகள்

துணைஆயர்

விஜயம்

# வங்காளத்திலும் பீகாரிலும் 1000 நக்ஸல்பாரிகள் கைது

கல்கத்தா, ஜூன் 10

மேற்குவங்காளத்தில் நேற்று மட்டும் 400 நக்ஸல்பாரிகள் கைதுசெய்யப்பட்டனர். பொலிசார் நேற்று நடத்திய திடீர் சோதனையில் வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் மற்றும் பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டனவாம். பயங்கரமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டனவாம். பயங்கரமான ஆயுதங்கள் சில ஹௌராவிலுள்ள பாடசாலைக் கட்டிடமொன்றில் இருந்து எடுக்கப்பட்டனவாம்.

### பீகாரில் 600 பேர்

பீகாரில் இதுவரை 600 நக்ஸல்பாரியினர் கைது செய்யப்பட்டுள்ளதாக பீகார் சட்டசபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

## புதியகட்சிக்கு பெருகும் ஆதரவு

புதுடில்லி, ஜூன் 10

ஒறிஸா மாநிலத்தில் முன்னாள் முதல்வர் பட்நாக் தொடங்கி உள்ள மாநிலக் கட்சியில் இந்திரா காங்கிரஸ் ஆதரவாளர்கள் பலர் சேர்ந்துள்ளார்கள்.

இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து திரு பட்நாயக் வெளியேறி மாநிலக்கட்சி என்ற பெயரில் புதியகட்சி ஒன்றை அமைத்தார். தற்போது இந்திரா காங்கிரஸ் [illegible]

## தி. மு. க. தேசியக் கட்சியாகும்

# பிரதமர் இந்திரா கருத்து

புதுடில்லி, ஜூன் 10

திராடமுன்னேற்றக்கழகம் தேசிய அடிப்படையில் தன்னை இணைத்துக்கொண்ட கட்சியாக இன்று காணப்படுகின்றது என திருமதி இந்திரா காந்தி பத்திரிகைக்களித்த பேட்டி ஒன்றில் கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது:- தனிநாட்டுக் கோரிக்கையு [illegible]

ஓர் ஆண்டில்

## ரூபா 6 கோடி திருப்பதிக்கு வருமானம்

திருப்பதி, ஜூன் 10

திருப்பதி ஏழுமலையான் ஆலயத்துக்கு ஒரே ஆண்டில் ரூபா 6 கோடி வருமான [illegible]

## பிரதமர் வில்சனை நோக்கி பாய்ந்தார் இளைஞர்!

லண்டன், ஜூன் 10

கிளாஸ்கோ நகரில் பிரதமர் வில்சன் தேர்தல் பிரசாரம் செய்து கொண்டிருக்கும் போது அவரைத்தாக்க முயற்சி நடந்தது.

திரு. வில்சன் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருக்கும் போது திடீரென இருபது வயது மதிக்கத்தக்க வாலிபர் மேடைமீது பாய்ந்தார்.

அவரைப் பொலிஸார் தடுத்தும் நிற்காமல் திமிறிக்கொண்டு வில்சனை நோக்கி முன்னேறியபோது பொலிஸார் உடனடியாகமேடையிலிருந்து அலாக்காகத்தூக்கிச் சென்று அப்புறப்படுத்தினர்கள்.

## 'சாதியைக் குறிக்கும் பெயர் மாற்றப்பட வேண்டும்'

புத்தூர், வியாழன்

"ஒற்றுமையாக முன்னின்று உழைத்தால்தான் எமது சமுதாயம் முன்னேற்றமடையும். எமக்கென்ன என்று இருந்தால் எமது கிராமம் முன்னேறமாட்டாது. ஒற்றுமையுடன் இயங்குவதற்கு ஒரு சிறந்த ஸ்தாபனம்வாசிகசாலைகளாகும். இதன் மூலம் நல்ல கலவியறிவைப் பெறுவதுடன் வாழ்க்கையிலும் மேலான காரியங்களைப் பெறலாம். சனசமூக நிலையங்களுக்குச் செல்வதன் மூலம் இந்த நாடுமட்டுமல்ல உலகத்திலுள்ள சகல விஷயங்களையும் அறிந்து அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்."

அச்சுவேலி இளங்கதிர் சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட பொதுக கூட்டத்தில கலந்து கொண்டு உரையாற்றுகையில ஆசிரியர்கு கனகலிங்கம் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

திரு. ம, மகாதேவன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சி. அபிமன்யு பேசுகையில் "சனசமூக நிலையங்கள் போன்ற பொதுஸ்தாபனங்கள் அவசியம் ஒவ்வொரு கிராமத்திலும் தேவை. இவற்றை நல்லமுறையில் கொண்டு செலுத்துவதற்கு அரசாங்கத்தைஎதிர்பாராது பொது மக்களே ஒற்றுமையாக முன் [illegible]

றம் செய்வதெனவும் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. நியமன எம். பி.யான திரு.எம் சி. சுப்பிரமணியத்தின் உதவி பெற்று இவ்வொழுங்கையின் பெயரை மாற்றியமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு.க. கனகசிங்கம், உபதலைவர். திரு. ம மகாதேவன், காரியதரிசி: திரு.சி. அபிமன்யு, உபகாரியதரிசி: திரு.க.சந்திரபோஸ் தனாதிகாரி' திரு. தி. வீரகத்தி, உபதனாதிகாரி: திரு. சு. செபமாலை.

## திருநாள்

பண்டத்தரிப்பு புதன்

இம் மாத இறுதியில் இளவாலை புனித யாகப்பர் தேவாலயத்தில் நற்கருணைத் திருநாள் கொண்டாடப்படும் அலங்கரிக்கப்பட்ட கிராம வீதிகளுடாகநற்கருணைநாதரின் ஊர்வலமநடைபெறவிருக்கிறது.

## "கணவரின் நல்ல கொள்கையே ஸ்ரீமாவின் வெற்றிக்குக்காரணம்"

முசலி, புதன்

"கூட்டணிஅரசின்வெற்றி உலக சோசலிச கொள்கைக் [illegible] யாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துக்கொண்டது"

மன்னார் தேர்தல் தொகுதி [illegible]

## தம்பாலையில் களவு

புத்தூர், புதன்

தம்பாலை கூட்டுறவுச் சங்கத்தில் பட்டப்பகலில் ஓட்டைப் பிரித்து பணமும், பொருட்களும் களவாடப்பட்டுவிட்டதாக அச்சுவேலிப் பொலிசில் அண்மையில் புகார்செய்யப்பட்டது.

அச்சுவேலிப் பொலிசார் புலன்விசாரணைசெய்ததைத் தொடர்ந்து அச்சுவேலி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சார்ஜண்ட் திரு. கே. சதாசிவம் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டி சந்தேகத்தின்பேரில் ஒரு வாலிபரைக் கைதுசெய்து மல்லாகம் நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்தது. நீதிபதி சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் இம்மாதம் 24-ம் திகதி ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

## பஸ் தட்டுப்பாடு நீங்கும்

கோட்டை, புதன்

பஸ் பிரயாணிகள் மிகவும் விரைவாகப் பிரயாணத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

புதிய நிதி ஒதுக்கீடு கிடைத்ததும் புதிய பஸ் வண்டிகளை சகல இ.போ.ச. டிப்போக்களுக்கும் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளிலும் இ போ.சபைத்தலைவர் திரு. அனில்முனசிங்கா ஈடுபட்டுள்ளார்.

தற்போதைய நிலைமையில் பஸ் போக்குவரத்து திருப்திகரமாக இயங்கி வருவதாகக் கூறிய திரு. முனசிங்கா, விரைவில் நிதி கிடைத்ததும் பஸ்களை அனுப்பி வைப்பதாக உறுதி அளித்தார். வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கும் அதிக பஸ்கள் அனுப்பிவைகவப் படும் என்றும் அவர் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகளுக்கிடையே நடாத்துகிறது.

மக்கள் தங்கள்வீடுகளையும் அந்தப்புரங்களையும் சுத்தம் செய்ய சௌக்கியப் பகுதியுடன் சேர்ந்து ஒத்துழைப்பதோடு தற்போது நடைபெறும் சுகாதார சொற்பொழிவுகளையும் கேட்க வேண்டுமெனவும் குக்கல் இளம்பிள்ளைவாதம் சின்னம்மை போன்ற தொற்று வியாதிகள் தங்கள் பிள்ளைகளுக்கு வராதவாறு தடுப்பூசிகளைப் போடுவிக்க வேண்டுமெனவும் இப்பகுதி வைத்தியாதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளதோடு அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

மேலும் அவர் இங்குள்ள சிற்றுண்டிச்சாலையாளர்களிடம் அவர்களது சிற்றுண்டிச் சாலைகளை சுத்தமாக வைத்திருப்பதோடு உணவுகளையும் மூடி வைக்குமாறு கோரியுள்ளார்.

அடுத்து பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்கு டீ.டீ.ரி தெளிக்க வருபவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கி நன்றாக வீடெங்கும் தெளிப்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் மலேரியாவை பூரணமாக ஒழிக்க முடியும் எனவும் வைத்திய அதிகாரி சுகாதார வாரத்தையொட்டி விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## இனத்துவேஷத்தை அகற்ற வேண்டும்

யாழ்ப்பாணம், வியா

கூட்டணியினரின் வெற்றி இலங்கைவாழ் சகல மக்களினதும் வெற்றி, கூட்டணியினர் பெற்றுக்கொண்ட அமோக வாக்குகளினாலும், அவர்கள் பெற்றுக்கொண்ட மிகக் கூடுதலான ஆசனங்களிலும் இருந்து தெரிந்து கொள்ளலாம் என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நல்லூர்க்கிளைக் காரியாலயத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்த யாழ் நகர் சிறீநாக விகாரையின் பிரதம சுவாமி வண. சோமராமநந்ததேரோ கூறினார்.

மேலும் சுவாமிகள் குறிப்பிடுகையில் இன, மத, சாதி பாராது அடைந்துள்ள கூட்டணியினரின் வெற்றியைத் தொடர்ந்து, இனத்துவேஷ பிற்போக்கு, வறுமை என்பவற்றை விரட்டுவதில் இலங்கை மாதாவின் மக்கள் போராட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் நல்லூர்க் கிளைத் தலைவர் தோழர் எஸ். ஏ. கந்தசாமி தலைமை தாங்கினார்.

## துணைஆயர் விஜயம்

பச்சிலைப்பள்ளி, புதன்

யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபையின் துணை ஆயர் வந்தனைக்குரிய எல். ஆர். அன்ரனி ஆண்டகை கடந்த 7ம் திகதி காலை தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்துக்கு வருகை தந்து திவ்விய பூசைப் பலியை நிறைவேற்றியதுடன் அவ்வூரைச் சேர்ந்த 50க்கு அதிகமான சிறுவர்களுக்கு முதற் திவ்விய நற்கருணை உறுதிபூசுதல்சடங்குகளையும் நிறைவேற்றிவைத்தார். இதன்பின் நடைபெற்ற வரவேற்பு விழாவில் ஆண்டகை அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்துக் கையளிக்கப்பட்டது முடிவில் ஆண்டகை அவர்கள் பொது மக்களுக்கு நன்றி கூறியதுடன் ஆசீர்வாதமும் நல்கினர். மாலை கட்டைக்காடு வெற்றிலைக்கேணி கிராமங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள கத்தோலிக்க தேவாலயங்களைப் பார்வையிட்டதுடன் அக்கிராமங்களிலுள்ள கிறீஸ்தவ மக்களை சந்தித்து அவர்களின் குறைகளையும் நேரில் அறிந்துகொண்டார் தாளையடிக் கட்டளைகுரவர் வண ஏ. லெபோன் ஆண்டகை அவர்கள் இப்பகுதி விஜயத்தின் ஒழுங்குகள் யாவையும் கவனித்தார்,

0 0 0

## 82 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர்

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் 82 பிள்ளைகள் கல்வி பயில்கின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் ஒரேயொரு ஆசிரியர் மட்டும் கல்வி போதிக்கிறார். சில மாதங்களுக்கு முன் இப் பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஆங்கில உதவி ஆசிரியர் ஒருவர் இம்மாத முற்பகுதியில் வேறோர் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மேற்குறித்த பாடசாலைக்கு ஓர் நிரந்தர் தலைமை ஆசிரியர், ஆங்கில உதவி ஆசிரியர், பெண் ஆசிரியர் ஆகியோரை நியமித்துத் தரும்படி பெற்றோர் ஆசிரியர் சங்கம் கிராம முன்னேற்றச் சங்கம் கல்விப்பகுதி உயர் அதிகாரிகளை வேண்டியும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. பிள்ளைகளின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்படுவது குறித்து பெற்றோர் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

சேர்ந்துள்ளார்கள்.

இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து திரு பட்நாயக் வெளியேறி மாநிலக்கட்சி என்ற பெயரில் புதியகட்சி ஒன்றை அமைத்தார். தற்போது இந்திரா காங்கிரஸ் கட்சியின் 15 ஆட்சிமன்ற உறுப்பினர்கள்விலகிஇவரது கட்சியில் சேர்ந்துள்ளார்கள். இந்த 15 ஆட்சிமன்ற உறுப்பினர்களும் தமக்கு தனிஇடம் கோரி சபாநாயருக்கு கடிதம் எழுதி உள்ளனர்.

— —

## வெடிவிபத்து: 34 பேர் பலி

கராச்சி, ஜூன் 10

பாகிஸ்தானிய நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 34 பேர் பரிதாபகரமாக மாண்டனர்

நிலக்கரிச்சுரங்கத்தில் திடீரெனத் தீபரவியதினால் அவ்வறையில் இருந்த பயங்கர வெடி மருந்துகள் வெடித்ததால் அறை உடைந்து சிதறியது. இதற்குள் அகப்பட்ட தொழிலாளர்களும், பொறியியல் நிபுணர்களும் மாண்டுபோயினர்

— —

## கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், வியா.

நந்தாவில் - கொக்குவில் கற்புலந்து மனோன்மணி அம்பாள் ஆலயக் கொடியேற்றம் 9-ம் திகதி நடைபெற்றது மகோற்சவங்கள் நடைபெறும் 11 நாட்களும் தொடர்ச்சியாக கம்பராமாயணம்பற்றி வித்துவான் பிரம்ம ஸ்ரீ நித்தியானந்த சர்மா கதாப்பிரசங்கம் நடாத்துகிறார்.

## புதிய இராணுவ முகாம்

கள்ளக்கடத்தலையும், கள்ளக் குடியேற்றத்தையும் தடுக்கும் முகமாக புதிய இராணுவ முகாமொன்று கட்டைக்காடு கிராமத்தில் கிறிஸ்தவ கோயிலுக்கு அண்மையில் நிறுவப்பட்டுள்ளது. இவர்கள் கடலில் ரோந்து சுற்றுவதற்கென அரசாங்கத்தால் புதிய பிளாஸ்ரிக் படகு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

## அரவம் தீண்டி இளம் பெண்மரணம்

கட்டைக்காட்டைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பெண் ஸ்கொலஸ்ரிக்கா (வயது 22) என்ற இளம் பெண் கடந்த சில தினங்களுக்கு முன் அரவம் தீண்டி மரணமானார். ஆறுக்கு மேற்பட்ட வைத்தியர்கள் சிகிச்சை அளித்தும் எதுவித பயனும் ஏற்படவில்லை.

டுகின்றது என திருமதி இந்திரா காந்தி பத்திரிகைக்களித்த பேட்டி ஒன்றில் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:-

தனிநாட்டுக் கோரிக்கையுடன் இயங்கிவந்த தி. மு. க. பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டு தன்னைத் தேசியக் கட்சியாக மாற்றிக்கொண்டது.

இந்திய கம்யூனிஸ்ட்டுகள் பற்றி திருமதி இந்திரா கூறுகையில், ரஷ்யாவினதும், சீனாவினதும் கொள்கைகளைக் கண்ணை மூடிக் கொண்டு கடைப்பிடித்து வந்த வலதுசாரிக் கம்யூனிஸ்டுகளுக்கும் இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கும் தற்போது இந்நாட்டு நிலைமைக்கேற்ப செயல்முறையை மாற்றி இயங்கவேண்டுமென உணர்ந்துவருகின்றனர் என்றார்.

— —

## 'எமது குறையைத் தீர்க்கவேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

'செம்பியன்பற்று, வெத்திலைக்கேணி, நாகர்கோயில் போன்ற கடற் தொழில் அபிவிருத்தியடைந்துவரும் இடங்களுக்கு அரசாங்கம் இயந்திரப்படகுகளை வாங்க உதவிசெய்து தரவேண்டும்' இவ்வாறு செம்பியன்பற்றுக் கடற்தொழிலாளர்கள் கிராமசேவகர் ஊடாக மேலதிகாரிக்கு அனுப்பி வைத்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

மேலும் மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

கருவாடுகளைப் பதப்படுத்தி இலங்கையின் பிற இடங்களுக்கும், உள்ளூர்ச் சந்தைகளுக்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்ய மீனவர்கள் பெரிதும் கஷ்டம் அனுபவிக்கின்றார்கள்.

பல கடற்தொழிலாளர்களது பெண்கள் அதிகாலையில் மீன்களைக் கடகங்களில் தமது தலைமேல் வைத்துச் சுமந்து பல கல் தொலைவிலுள்ள இயக்கச்சி, எழுதுமட்டுவாள் ஆகிய போக்குவரத்துச் சந்திக்கு வரவேண்டியுள்ளது.

இதையிட்டுப் பல தடவை கிளிநொச்சி, பருத்தித்துறை எம். பி. க்கள் மூலம் முறைப்பாடு செய்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஆகவே வருங்காலத்தில் கடற்தொழில் வளம்பெற உடனடியாக இயந்திரப் படகுகள் பெற வசதியும், போக்குவரத்திற்கு வாகன வசதியும் செய்துதரும்படி வேண்டுகின்றோம்'

(கு. வி. ம.)

## திருப்பதிக்கு வருமானம்

திருப்பதி, ஜூன் 10

திருப்பதி ஏழுமலையான் ஆலயத்துக்கு ஒரே ஆண்டில் ரூபா 6 கோடி வருமானம் கிடைத்துள்ளது என திருப்பதி ஆலய பரிபாலனசபை தலைவர் ரங்கராஜு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் திருப்பதி ஆலய வருமானம் பற்றிக் குறிப்பிடுகையில் 'திருப்பதி ஆலய வருமானம் மிகவேகமாக உயர்ந்துகொண்டு வருகிறது. கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த ஒரு ஆண்டு காலத்தில் ரூபா 6 கோடி வருமானம் கிடைத்துள்ளது. கடந்த மே மாதத்தில் மட்டும் உண்டியல் மூலம் 49 லட்சம் ரூபாவருமானம் வந்துள்ளது. ஏராளமான பக்தர்கள் தினமும் வந்து குவிவதே வருமான அதிகரிப்புக்குக் காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

— —

## பிச்சைக்காரர் பிரச்னை ஒழிக்கப்படும்

கோட்டை, புதன்

நாட்டில் பிச்சைக்காரர் பிரச்னையை இல்லாமல் செய்ய சமூக சேவையமைச்சர் திரு. ரி பி தென்னக்கோன் தீர்மானித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக பிச்சைக்காரர்கள் தொகை நாட்டில் இரு மடங்காக அதிகரித்துள்ளமை சமூக சேவை இலாகாவினது சமீபத்திய புள்ளிவிபரங்களிலிருந்து அறியக்கூடியதாகவிருக்கிறது. இப்பிச்சைக்காரர்களில் அனேகர் வேலை செய்யத் தகுதியுடையவர்களாகவும் நல்ல சுகதேகிகளாகவுமுள்ளனர் என்பதை இவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

## யாழ். கிளை பாராட்டு

யாழ்ப்பாணம், வியா.

அரசாங்கலிகிதர் சேவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை, பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும், சகல அமைச்சர்களுக்கும் பாராட்டுச்செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அரசாங்கம் மேற்கொள்ளும் சோஷலிச முற்போக்குத் திட்டங்களுக்கு எமது மனப்பூர்வமான ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்கத்தயாராய் உள்ளோம் என்று பாராட்டுச் செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கு. வி. ம.)

பொதுஸ்தாபனங்கள் அவசியம் ஒவ்வொரு கிராமத்திலும் தேவை. இவற்றை நல்லமுறையில் கொண்டு செலுத்துவதற்கு அரசாங்கத்தைஎதிர்பாராது பொதுமக்களே ஒற்றுமையாக முன்னின்று உதவி செய்யவேண்டும்'' என்று குறிப்பிட்டார்

'சாதியினதும், சமூகத்தினதும் பெயர்களைக் குறிப்பிடும் தெருக்கள் ஸ்தாபனங்கள். பொதுநிலையங்கள் ஆகியவற்றின் பெயர்களை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரும் தீர்மானமும் இக்கிராமத்தில் உள்ள ஒரு சமூகத்தின் பெயரைக்குறிக்கும் தெருவின் பெயருக்கு 'பாரதி ஒழுங்கை' எனமாற்

## ''கணவரின் நல்ல கொள்கையே ஸ்ரீமாவின் வெற்றிக்குக்காரணம்''

முசலி, புதன்

''கூட்டணிஅரசின்வெற்றி உலக சோசலிச கொள்கைக்கும், பொருளாதார சுபீட்ச வாழ்வுக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும். எமது தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேர்மை மிகுந்த வாக்குறுதிகளாலும் அவரது கணவனின் சிறந்த கொள்கைகளாலும், இன்று இலங்கை வரலாற்றில் ஒரு தனியிடத்தையும் புதிய ஒரு வெற்றியையும், ஒருசகாப்தத்தையும் எமது கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துக்கொண்டது''

மன்னார் தேர்தல் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியுற்ற திரு. என். எஸ். ஏ. காதர் வங்காலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளையொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்துக்கு திரு. யோசவ் மார்க் தலைமை வகித்தார்.

இதோ! புதிய


# பொலித்தியோன் ஈ.சி. 100%

(பெனிட்ரோதயோன் 100%)

BAYER

இந்தப் பெயரை மறவாதீர்கள்!
எந்தப் பயிருக்கும் ஏற்ற பாதுகாப்பு இதுவே!

நெல்லைப் பாதிக்கும் நெற் சந்துக்குத்தி, தத்துக்கிளி, கொப்புள ஈ, நெல் ஈ, பனிப்பூச்சி, ஐங்கோண மூட்டுப் பூச்சி, இலையரிப்புழுக்களையும்,



அன்னுசியைப் பாதிக்கும் மீலிபக்ஸ் புழுவையும் புகையிலை, காய்கறி, வெங்காயம், பருத்தியைப் பாதிக்கும் எல்லாப் பூச்சி புழுக்களையும் அழிக்க வல்லது பொலித்தியோன்.

பொலித்தியோன் ஈ.சி. 100% அதி வன்மை வாய்ந்தது. மிகவும் சிக்கனமானது.

2 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 4 அவு. பெனிட்ரோதயோன் 50%
4 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 8 ,, ,,
8 அவு. பொலித்தியோன் ஈ.சி. 100% = 16 ,, ,,

பொலித்தியோன் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பணலாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் பீடை நாசினிகள்.

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P. 91142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

விவேகமே எல்லாவித கருமங்களுக்கும் ஆதாரம். விவேகம் அற்றவன் குருடனைப் போன்றவன்.

— பாரதியார்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889,

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் வைகாசி மாதம் 28-ந் திகதி (11-6-70)


## இ. போ. ச. வுக்குப் புத்துயிர்

பஸ் பிரயாணிகளின் வசதிகளையே தாம் முதலில் கவனிக்கப் போவதாக இலங்கை போக்குவரத்து சபையின் புதிய தலைவர் அனில் முனசிங்கா அறிவித்துள்ளார். இது பெரிதும் வரவேற்கத்தக்கது முதல் நடவடிக்கையாக பஸ்ஸில் உள்ள ஆசனங்களை சுத்தம் செய்து, பழுதுபார்க்கும்படி அவர் உத்தரவிட்டுள்ளதுடன் பஸ்ஸின் உள்ளும் புறமும் சாயம் பூசி, ஒழுங்காகக் கழுவி சுத்தம்செய்யவேண்டுமென்றும் கேட்டிருக்கின்றார். பிரயாணிகள் தங்கள் புகார்களைக் கூற வசதிசெய்யப்பெறுமென்றும், ஒவ்வொரு பஸ் டிப்போவிலும், பிரயாணிகள் கவுன்ஸில் ஏற்படுத்தி, பொதுமக்களுக்கும் இ. போ. சபைக்கும் நல்லுறவு ஏற்படச்செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன், போயா கழிந்த 3-ம் நாள் ''மக்கள் தினம்'' என்று அறிவித்து, பொதுமக்கள் அன்று தம்மை நேரில் சந்தித்து புகார்களையும், யோசனைகளையும் தெரிவிக்கலாமென்று அவர் ஏற்பாடுசெய்திருப்பது, பலவிதங்களிலும் நல்லதாகும்.

புதிய அரசாங்கம் பதவி ஏற்றதிலிருந்து இ. போ. ச. வுக்குப் புத்துயிர் ஏற்பட்டுள்ளது! சிப்பந்திகளும் பொதுவாக புதிய ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் பணிசெய்வதாகவும் வருமானமும் அதிகரித்துவருவதாகவும் தெரியவருகிறது. சிப்பந்திகள் குறைகளின்றி உற்சாகமாக உழைத்தால் தான் எந்தச் சேவையும் வெற்றிகரமாக நடைபெற முடியும். தங்களுக்கு ஏதும் குறையிருப்பின், அதிபரிடமே அதை நேரில் தெரிவித்துக்கொண்டு அதற்குப் பரிகாரம் பெறமுடியுமாயின் ஊழியர் அதிக திருப்தியுடன் தொண்டாற்றுவதுடன் திடீர் வேலைநிறுத்தம் முதலியவற்றுக்கு இடமில்லாமற் போகும். புதிய ஆட்சியை பொதுவுக ஊழியர்கள் தங்களுடைய சொந்த ஆட்சி என்று கருதுகின்றார்கள். பொதுமக்களே உண்மையான எஜமானர்கள். அவர்களே புதிய ஆட்சியாளரைத் தெரிவுசெய்து அனுப்பியுள்ளதுடன், சிப்பந்திகள் அனைவருக்கும் அவர்கள் செலுத்தும் பணம்தான் சம்பளமாகவும் கொடுபடுகின்றது பஸ்ஸில் செல்லும் பிரயாணிகளே தங்களுடைய உண்மையான எஜமானர்கள் என்பதை உணர்ந்து ஒவ்வொரு இ. போ. ச. சிப்பந்தியும் கடமையாற்றுவதாயின் இ. போ. ச. வின் சேவையும் மேம்பட்டு, மிக லாபகரமாக இது நடைபெற முடிவதாக இருக்கும்.

வட இலங்கையிலும் இ. போ. ச. சேவையை மேம்படுத்த அதிக இடமுண்டு. புதிய தலைவர் திரு. முனசிங்க யாழ்ப்பாணம் உள்ளிட்டு பல வடமாகாண டிப்போக்களுக்கும் நேரில் விஜயம்செய்து இங்குள்ள குறைகளை அறிந்து அவற்றைச் சீர்செய்யவேண்டும். இலங்கையிலே இரண்டாவது பெரியநகரமான யாழ்ப்பாணத்தில் ஒரு ''டவுன் பஸ்'' சேவை எவ்வளவு அவசியமென்று விளக்கத்தேவையில்லை. பஸ்ஸிலே இந்தியாவிலுள்ளது போல் பெண்களுக்காக மூன்று அல்லது நான்கு வரிசை ஆசனங்களை ஒதுக்கச் செய்யவேண்டும். யாழ்ப்பாணத்தில் இரண்டுதட்டு பஸ்களை முதல்முதலாக அனுப்பிவைத்தது திரு. அனில் அமைச்சராக இருந்தபோதுதான். அவருடைய தலைமையில் இ. போ. ச. மேன்மேலும் அபிவிருத்தியடைந்து பிரயாணிகளுக்கான வசதிகள் பெருகுவதுடன், சிப்பந்திகளும் மனத் திருப்தியுடன் பணிசெய்யவும், வருமானமும் அதிகரித்து அரசாங்கத்துக்கு நல்ல இலாபம் கிடைக்கக்கூடியதாகவும் இருக்குமென்று எதிர்பார்ப்போம்.

சேக்கிழார் விழாவில் முருகேச முதலியார் கவலை:

# ''வாழ்க அந்தணர்' பாடும்போது வெளியே போய் விடுகிறார்களே!

## சைவத்துக்கு அவமரியாதை!!''

யாழ்ப்பாணம், சனி

ஒவ்வொரு நாட்டிலும் தேசிய கீதம் பாடப்படும் பொழுது ஒவ்வொரு பிரஜையும் எழுந்து நின்று அதற்கு மரியாதை செய்ய வேண்டுமென அந்நாட்டு அரசாங்கம் வற்புறுத்தி வருகிறது. தேசிய கீதம் பாடப்படும் போது சிறியவர் முதல் பெரியவர்வரை, எழுந்து நின்று தலைகுனிந்து மௌனமாக நிற்கின்றார்கள் தேசிய கீதம் முடியும் சிறியவர் முதல் செரியவர் வரை அமைதியாக எழுந்து நிற்கின்றார்கள். ஆனால்சைவ சமய விழாக்களில் வாழ்க அந்தணர்' பாடும் போது சைவப் பெரியார்கள் கூட வெளியில் போய்விடுகிறார்கள் அப்பொழுது எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டுமென எவரும் கருதுவதில்லை. இது சைவத்திற்கு செய்யும் பெரும் அவமரியாதையாகும்.

யாழ்ப்பாணத்தில் நடந்த சேக்கிழார் விழாவின் 2வது தின நிகழ்ச்சியின் போது இராவ் சாகிப் திரு நல் முருகேச முதலியார் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடந்த இவ்விழாவிற்குமுதலியார் சி. முத்துத்தம்பி தலைமைவகித்தார்.

திரு. நல' முருகேச முதலியார் மேலும் பேசுகையில் கூறியதாவது: நீங்கள் யார் என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும் அதன் பின் தெய்வத்தை அடைவது சுலபம். இதனையே சேக்கிழார் பெருமான் வலியுத்தியிருக்கிறார். இளைஞர்கள் ஆராய்ச்சி செய்துவர வேண்டும். அதற்கேற்றபடி சமூகஇலக்கிய பக்தி நூலாக பெரிய புராணம் விளங்குகிறது.

சேக்கிழார் வாழ்ந்தகாலம் என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். அவர் எந்த சூழ்நிலையில் வாழ்ந்தார். சைவத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்காகவே, சிவபக்தியை வலியுறுத்துவதற்காகவே, அவர் பாடுபட்டார். திருவாய் மலர்ந்த தெய்வீகப்பாடல்களை உலகிற்கு அளிப்பதற்காகவே சேக்கிழார் பெருமான் ... தது. சேக்கிழார்போல் தமிழ் மொழியில் பற்றுக் கொண்டவர் தமிழ் அபிமானி எவருமில்லையென்றே கூறலாம். ஞானசம்பந்தர் பதிகம் பாடிய மொழிக்கு வழிபாட்டில் எந்தளவுக்குஇடம்இருக்றது. இக்குறைநீங்க வேண்டும்.

தமிழ் சிறந்த மொழி என்று பேசுகின்றோம். சிந்தாமணி சிலப்பதிகாரததை தந்த மொழி என்கின்றோம். பாரதம் இராமாயணம் போன்ற மிகச்சிறந்த காவியங்களை தந்தமொழி என்று பெருமை பேசுகின்றோம். அதே நேரம் வேதங்களையும் ஆகமங்களையும் ஒத்துக் கொள்கிறோம். திருமுறையில் அர்ச்சனை செய்தால் அது ஆகம விரோதம் என்கிறார்கள். சிலர் மீண்டும் சைவம் தழைத்தோங்க வேண்டுமானால் அது திருமுறையினால் தான் முடியும் வாலிபர் திருமுறையை உணர்ந்து சைவத்தின் பெருமையை அறிந்து கொள்ள வேண்டும்.

சேக்கிழார் மன்ற தலைவர் திரு. ம. ஸ்ரீகாந்தா பேசும் போது கூறியதாவது பெரிய புராணபரீட்சைப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் 9 கல்லூரிகள் மட்டும் கலந்திருப்பதுவருத்தற்திற்குரியது. ஏனைய கல்லூரி அதிபர்களும், ஆசிரியர்களும் அடுத்த ஆண்டு போட்டியில் ஊக்கம் எடுக்கமுன்வர வேண்டும். சில கல்லூரிகள் பெரிய புராணத்தைப்படிப்பதில் ஊக்கம் காட்டிவருவதை நான் தான் பாராட்டுகிறேன் யூனியன் மகாஜன கல்லூரி மாணவர்கள் பெரிய புராணத்தை ஆர்வத்துடன் படிப்பதனால் போட்டிகளில் கூடுதலான பரிசுகளை பெற்றார்கள் மற்றக்கல்லூரிகளும் ஊக்கம் காட்டிவருகின்றன. அடுத்த ஆண்டு போட்டியில் மற்றும் கல்லூரிகளும் பரிசுகள் பெறும் என்றநம்பிக்கை எனக்கிருக்கிறது.

ஒவ்வொரு கல்லூரியிலுமுள்ள இந்து இளைஞர்மன்ற பிரதிநிதிகள், ஆசிரியர்களைக் கொண்ட கருத்தரங்கை நடாத்த தீர்மானித்திருக்கிறோம். சேக்கிழார் மன்றம் ஆறுமுகநாவலர் சபைஆகியவற்றின் கீழ்இக்கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது. இக் கருத்தரங்கில் மாணவர் மட்டுமல்ல பெரியவர்களும் பங்குபற்றலாம்.

திருமதி இரத்தின நவரத்தினம் தலைமையில், சேக்கிழார் விழாவையொட்டி கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் செல்வி புஷ்பாசெல்வநாயகம், வித்துவான் பொ. அ. கனகசபை, திரு. க. சிவராமலிங்கம், திரு. க கி. நடராசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் பொ. இரகுபதி வேம்படி மகளிர் கல்லூரி மாணவி செல்வி மஞ்சுளா சிவசங்கரநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

# 'பிற்போக்கு வாதிகள் முற்றாகச் சாகவில்லை'

## ஸ்ரீமாவோவுக்கு எச்சரிக்கை

மாவிட்டபுரம், புதன்

''மாணவர்களினதும் தொழில்நுட்பத்துறையில் பயில்பவர்களினதும் கஷ்டநிலைகளை நன்குணர்ந்து தகுந்த வாழ்வை நலம்பெற [illegible]ய்க, மக்கள் முன்னணி [illegible] நடவடிக்கைகளுக்கும் மாணவர் சம்மேளனம் பக்கபலமாயிருக்கும் என்று அகில இலங்கை தொழில் நுட்ப [illegible]க சம்மேளனம் பிரதமர் மீது இந்நாட்டுப்பற்றுள்ள மக்கள் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கையை மனதில் கொண்டு செயலாற்றுமாறும் பிற்போக்கு வாதிகள் இன்னமும் முழுதாக சாகடிக்கப்படவில்லை என்பதையுணர்ந்து [illegible]வர்களது வளர்ச்சிபற்றி மிகவும் எச்சரிக்கையுடன் உங்கள் அரசாங்கம் பலமுற்போக்கு நடவடிக்கைகளை [illegible]க்கும் என்ற நம்பிக்கை எமக்

## 'நேரில் நடவடிக்கை எடுங்கள்'

மட்டுவில், புதன்

''நாங்கள் எத்தனையோ கடிதங்கள் எழுதியும் நேரில் கண்டு சொல்லியும் எமது பல நோக்கு கூட்டுறவு விஷயங்கள் சம்பந்தமாக எமது பகுதி கூட்டுறவு பரிசோதகர்கள் எதுவித நடவடிக்கைகளும்எடுக்கவில்லை. எனவே தாங்களே இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.''

இவ்வாறுமட்டுவில்தெற்கு சோமஸ்கந்தா பல நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் திரு வல்லிபுரம் மயில்வாகனம், செயலாளர் திரு. எம். சின்னத்துரை ஆகியோர், யாழ்ப்பாணம் கூட்டுறவு உதவி ஆணையாளரிடம் நேரில் சென்று முறையிட்டுள்ளனர்.

இவர்கள் தங்கள் முறைப்பாட்டில் மேலும் கூறியதாவது:-

எமது பலநோக்கு கூட்டுறவு சங்கம் இப்பொழுது புதிய நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. இதில், எம், ஸி எல். போன்ற இன்னும் பல அம்சங்கள் பரிசீலனை செய்யவும், எமது எம். ஸி. எல். கடன்பெற்றவரிடமிருந்து திருப்பி அறவிடுவது பற்றியும் வழிவகைகள் தெரிந்து கொள்ளவும், இந்த கூட்டுறவு பரிசோதனை அதிகாரிகள், எமது ஸ்தாபனத்திற்குவந்து இந்த விஷயத்தில் ஒத்துழைக்கும்படியும் ஆலோசனை கூறும்படியும் கேட்டும், இதுவரை அவர்கள் எமது கோரிக்கையை நிறைவேற்றவில்லை. எனவே நாம் நேரில் வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறினர்,

## ''ஆசிரிய உலகில் விடி வெள்ளி''

யாழ்ப்பாணம், வியாழன்

''ஒருசிறந்த ஆசிரியனுக்கு அமையவேண்டிய சிறந்த பண்பு, ஒழுக்கம், தெய்வ வசீகரமான தோற்றம் என்பவை எல்லாம் ஒருங்கு அமையப்பெற்றவர் திரு. செ. அமிர்தலிங்கம் அவருடைய சேவை இக்கல்லூரிக்கு என்றும் வேண்டற்பாலது. ஆசிரிய உலகிற்கு விடி வெள்ளியாக அமையப் போகிறது அவருடைய வாழ்க்கை' என்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் விளையாட்டுத்துறை ஆசிரியராகக் கடமையாற்றி பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு விசேட பயிற்சி பெறச்சென்றுள்ள

## ஜயாறன் எழுதுவது:

அனுராதபுரத்திலிலே புனித போதிமரத்தடியிலே பிரதமர் ஸ்ரீமா இரு கைகளையும் கூப்பி பக்தியுடன் வழிபாடுசெய்கிறார். அவரது அமைச்சர்களும் அவருடன் சென்றுள்ளனர். இதில் மார்க்ஸியவாதியான டாக்டர் என். எம். மும் இரு கைகளையும் கூப்பி, கண்களை மூடிக்கொண்டு அஞ்சலி செய்யும் படத்தைப் பார்த்தேன். ஸ்ரீமா மீது முன்னை விட அதிக மதிப்பு ஏற்பட்டது. சமயப்பற்றுசாதாரணமாக மார்க்ஸியவாதிகளுக்குக் கிடையாதென்பர். ஆனால் அப்படிப்பட்டவர்களையும் மாற்றிவிடக்கூடிய சக்தி பிரதமர் ஸ்ரீமாவிடம் இருப்பதைப் பார்க்கின்றோம். பெண்கள் மனம் வைத்தால் அவர்களால் எதுதான் செய்யமுடியாது.

0 0 0

சீர்காழியிலே திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளின் குருபூசையின்போது ஒரு கருத்தரங்கு நடைபெற்றதாம். சம்பந்தமூர்த்தி சுவாமிகள், தமது இன்னிசையால் தமிழையே பரப்பினார் என்று ஒரு சார்பினரும், மற்றொரு சார்பினர் அவர் இன்னிசையால் சமயத்தையே பரப்பினார் என்று வாதித்தனர். தமிழகச் சட்டசபைத் தலைவர் புலவர் கோவிந்தன் நடுவராக இருந்தார். முடிவில் சுவாமிகள் இன்னிசையால் தமிழையே பரப்பியதாகத் தீர்ப்புக் கூறப்பட்டது.

கருத்தரங்கு நடவடிக்கையில் தருமை ஆதீனத்தின் விசேஷ அழைப்பின் மீது அங்கு கதாப்பிரசங்கம் செய்யச் சென்றிருந்த யாழ்ப்பாணத்து தம்பிரான் (ஸ்ரீசுவாமிநாத தம்பிரான்) கவனித்துவந்தார். அவர் பின்னர் ஸ்ரீ சம்பந்தமூர்த்தி நாயனாரைப் பற்றி கதை செய்கையில், ''தமிழ்வளர்ப்பதற்காக சுவாமிகள் பதிகங்கள் பாடவில்லை என்றும், வேதநெறி தழைத்தோங்கவும் மிக சைவத்துறைவிளங்கவும், பூசுபரம்பரை (மக்கள் குலம் வாழவுமே அவர் பாடியதாகவும் அவர் தமது இன்னிசையால் தமிழையும் வளர்த்தார் என்றும் உணர்ச்சியுடன் பேசிய போது, அங்கிருந்தபெருங்கூட்டம் பன்முறையும் கரகோஷம் செய்து பாராட்டியதாம். தமிழ் நட்டிலே வந்தது. அவர்கதைசெய்கையில் புலவர் கோவிந்தனும் கடைசிவரை இருந்துகேட்டாராம்.

பின்னர் தருமை ஆதீனத்திலே குருஞான சம்பந்தரின் வரலாற்றைப்பற்றி இன்னிசையாகக் கதைசெய்வீர்களா? என்றுகயிலை குருமணி கேட்டதற்கு வரலாற்றுக் குறிப்பும், மூன்று நாள் அவகாசமும் அளித்தால் அப்படியே செய்வதாக தம்பிரான் ஒப்புக்கொண்டார். அதன்படியே புதிய கீர்த்தனங்களை ஆக்கி, கயிலை குருமணியின் (தருமை ஆதீன கர்த்தர்) பணியையும் அப்பாடலில் சேர்த்து, அருமையாகக் கதைசெய்து, எல்லாருடைய நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றாராம். இதுவரை அங்கு, ஸ்ரீகுருஞான சம்பந்தரைப்பற்றி யாருமே இப்படி சங்கீத கதாப் பிரசங்கம் செய்ததில்லையாம். தம்பிரான் அவர்கள் இசையுடன்செய்த கதையை அங்கு ''ரேப் ரிகார்ட்'' செய்துவைத்துள்ளதாகத்தெரிகிறது.

தமிழகத்தில் பல ஆதீனங்களின் ஆசியையும் ஆதரவையும் அமோகமாகப் பெற்றுவரும் யாழ்ப்பாணத் தம்பிரான் நேற்று மீண்டும் தமிழகத்துக்கு சமயப்பணி செய்யப் பறந்துசென்றுள்ளார்.

எப்போது திரும்புவீர்களென்று கேட்டதற்கு தமக்கே நிச்சயமாகத்தெரியாதென்றும், அங்கு அதிக நிகழ்ச்சிகள் இருப்பதாயும், எப்படியும் நல்லூர் உற்சவத்துக்கு வந்துவிடுவதாகவும் கூறினார். தமிழகத்தில் நல்ல கலைஞர்களுக்கு நல்ல கிராக்கியும் மதிப்பும் பெருகிவருகிறது. தம்பிரான் அவர்களுக்கு ஒரு கதை செய்ய அங்கு இருநூறு ரூபாய்களும் போக்குவரத்து செலவும் தருகிறார்களாம். ஈழத்திலும் இவ்வித நிலை எப்போது ஏற்படுமோ?

0 0 0

நாளும் இன்னிசையால்
தமிழ் பரப்பும் ஞானசம்
பந்தனுக்கு உலகவர்
முன்,
தாளம் ஈந்தவன் பாட
லுக்கிரங்கும் தன்மை
யாளனை என்மனக்
கருத்தை
ஆளும் பூதங்கள் பாட
நின்றாடும் அங்கணன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வித்துக்கொண்டு அதற்குப் பரிகாரம் பெறமுடியுமாயின் ஊழியர் அதிக திருப்தியுடன் தொண்டாற்றுவதுடன் திடீர் வேலைநிறுத்தம் முதலியவற்றுக்கு இடமில்லாமற் போகும். புதிய ஆட்சியை பொதுவக ஊழியர்கள் பெருகுவதுடன், சிப்பந்திகளும் மனத் திருப்தியுடன் பணிசெய்யவும், வருமானமும் அதிகரித்து அரசாங்கத்துக்கு நல்ல இலாபம் கிடைக்கக்கூடியதாகவும் இருக்குமென்று எதிர்பார்ப்போம்.

## ஜப்பானிய 'வேலைநிறுத்தம்'

ஜப்பானிலே பெரிய தொழிற்சாலைகளில் 'வேலை நிறுத்தம்' நடைபெற்றாலும், அங்கு ஊழியர்கள் கைகளில் கறுப்பு நாடாவைக் கட்டிக்கொண்டு வேலையை முன்னையைவிட அதிக ஊக்கமாகச் செய்கிறார்களாம்! வேலைநிறுத்தத்தை அறிவித்ததும். ஊழியர்களே தொழிற்சாலையைப் பூரணமாகப் பொறுப்பேற்கின்றனர். சாதாரணமாக ஒருநாளைக்கு 100 ஆயில் எஞ்சின்கள் உற்பத்தியாகும் தொழிற்சாலையிலே, வேலை நிறுத்தக் காலத்தில் 125 எஞ்சின்கள் வீதம் உற்பத்தியாகுமாம்! தங்கள் தொழிலாளரின் திறமையைக் கண்ட நிர்வாகிகள் வியப்படைந்து, இருதரப்பினருக்கும் திருப்தியான முறையில் குறைகள் தீர்க்கப்படுவதாகத் தெரிகிறது.

தொழிலாளருக்குக்குறைகள் இருப்பின் அவற்றைத் தீர்த்துக்கொள்ள அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான். என்றாலும்அதனால்பொது மக்களுக்கோ, நாட்டுக்கோ எவ்வித பாதகமும் ஏற்படாதபடி, ஜப்பானிய தொழிலாளர், 'வேலை நிறுத்தம்' செய்து உற்பத்தியைப் பெருக்குவது நல்ல முன்மாதிரியாகும். இலங்கை முதலிய நாடுகளில் வேலைநிறுத்தமென்றால், பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. முதலாளி-தொழிலாளி உறவுகள் மிக மோசமடைகின்றன. நாசவேலை முதலியவையும் நடக்கின்றன. இதனால் தொழிலாளர் தங்களுக்குத் தாங்களே பெருந்தீங்கு செய்துகொள்ளுகின்றார்கள். வேலைசெய்யாத நாட்களில், ஏழைகளானதொழிலாளர் வீட்டு அடுப்பங்கரையிலும் வேலைநிறுத்தம் நடக்கும். இதனால் அதிகம்பாதிக்கப்படுபவர்கள் முதலாளிகளை விட எளிய தொழிலாளரே. அந்தஆயுதம் இருபுறமும் கூர்மையுள்ள கத்தி போன்றது. முதலாளிகளை மட்டுமன்றி, தொழிலாளரையும் தாக்கும்.

புதிய அரசாங்க மூலம் நாட்டுக்கு உண்மையில் நன்மை ஏற்பட வேண்டுமாயின் இங்கு தொழில் அமைதி நிலவவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. தொழிலாளருக்கு ஏதும் குறைகளிருப்பின், பேச்சு வார்த்தை மூலம்அதை நல்ல முறையில் தீர்த்துக்கொள்ள அரசாங்கம்தக்க ஒழுங்குகளைச் செய்யுமென்றே நம்புகிறோம். தொழில் அமைதி நிலவினாலே நாட்டில் அபிவிருத்தி ஏற்படமுடியும்.

## சத்திரசிகிச்சை வைத்தியரின் நன்கொடை

கோட்டை, புதன்

நிதிஅமைச்சரால் ஆரம்பிக்கப்பட்ட ''நாட்டைக் காப்பாற்றுங்கள்'' நிதிஉதவிக்கு திருமதி பண்டாரநாயக்காவைத் தொடர்ந்து கொழும்பு அரசாங்கவைத்தியசாலை பிரதம சத்திர சிகிச்சை வைத்தியர் டாக்டர் பி. ஆர். அந்தோனிஸ் தனது ஒருமாதச் சம்பளத்தை வழங்கியுள்ளார்.

0 0 0


**வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி**

**விளையாட்டுப் போட்டி**

**12-6-70 வெள்ளிக்கிழமை**

பிற்பகல் 2-30மணி

2302 அனைவரும் வருக! கல்லூரி முதல்வர்.



இப் பத்திரிகை ''ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் 63-ம் இலக்க அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


சைவத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்காகவே, சிவபக்தியை வலியுறுத்துவதற்காகவே, அவர் பாடுபட்டார். திருவாய் மலர்ந்த தெய்வீகப்பாடல்களை உலகிற்கு அளிப்பதற்காகவே சேக்கிழார் பெருமான் அவதரித்தார். அவர் வாழ்ந்தகாலத்தில் சைவத்தை தெய்வீகப்பாடல்கள் மூலம் விளக்குவது அவசியமாயிற்று அதனாலேயே இப்பணியைச் செய்யமுன் வந்தார்.

சேக்கிழார் அமைச்சராக இருந்ததால் அன்றைஅரசாங்க நிர்வாகத்தைப்பற்றி நன்கு அறிந்துணர்ந்திருந்தார். அன்றைய அரசாங்கம் மதசார்புள்ளதாக இருந்துள்ளதால் அவர் தேவாரம் திருவாசகத்தை நன்கு அறிந்திருந்தார் அதனால் தான் நாயன்மார்சரித்திரத்தில் அவற்றை எழுதி இயம்பியிருக்கின்றார். நாயன்மார்கள் எப்படியெல்லாம் வல்ல இறைவனை அடைந்தார்கள். அவர்களின் குடும்ப நிலையென்ன? என்பதை எல்லாம் விளக்கியிருக்கிறார் இந்தக்காலத்தில் கையாள்வதுபோல கையாண்டிருக்கிறார் எந்த நாட்டவரானாலும் சரி, எந்தச் சமூகத்தவரானாலும்சரி அநுபவக் கண்கொண்டு பார்த்தால், அது இறைவன் மயமாக இருக்கும்.

முதலியார் செ. சின்னத்தம்பி பேசும்போது கூறியதாவது: சைவ சமயத்திற்குரிய பெருமை மங்கிமறைந்து வருகின்றது. சைவசமயத்தின் சுவட்டை கால வெள்ளம் அழித்துவருகிறது. பிற சமயத்தவர்கள் எவ்வளவு உணர்ச்சி பெருக்கோடு, சமயப் பெரியர்களை வணங்கி வருகிறார்கள். அந்தநிலை சைவ சமயத்தில் இல்லை. கிறிஸ்தவர்கள் யேசுவையும் பௌத்தர்கள் புத்தரையும் இஸ்லாமியர்கள் நபிநாயகத்தை என்றும் மனதில் நினைத்துவணங்கி வருகிறார்கள். ஆனால் சைவர்கள் நால்வர் பெருமான்களுக்கு என்னமதிப்பு கொடுத்துள்ளார்கள் அவர்கள் சைவசமயத்திற்கு செய்த பணியை மறந்துவிட்டார்கள் சைவப் பெருமக்களை மறந்துவிட்டார்கள் சைவசமயத்திற்கு அவலம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்மொழி பெரும் சிறப்புமொழி, எத்தனையோ பெருமைகளைக் கொண்ட தமிழ் மொழி சேக்கிழாருக்கு குறைவாகவே காணப்பட்டது. தமிழ் மொழிசிறப்புடையதாக இருந்தாலும் ஆண்டவன் வழிபாட்டிற்கு அதுபயன் படுத்தப்படவில்லைஎன்ற குறை இருந்

வி

...யக, மக்கள் முன்னணி ...ல நடவடிக்கைகளுக்கும் மாணவர் சம்மேளனம் பக்கபலமாயிருக்கும்'' என்று அகில இலங்கை தொழில் நுட்ப ...க சம்மேளனம் பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு அனுப்பிதுள்ள நீண்ட தந்தியொன்றில் தெரிவித்துள்ளது. அத்தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உங்கள் தலைமையிலான 'மக்கள் அரசாங்கம்' ஈழத்து மக்களின் முக்கியபிரச்சனைகள் சகலதையும்திருப்திகரமாக தீர்த்துவைக்குமென நம்புகிறோம் உங்கள் தாக சாகடிக்கப்படவில்லை என்பதையுணர்ந்து ...வர்களது வளர்ச்சிபற்றி ...கவும் எச்சரிக்கையுடன் உங்கள் அரசாங்கம் பலமுற்போக்கு நடவடிக்கைகளை ...க்கும் என்ற நம்பிக்கை ... எமக்குண்டு.

மாணவர்களின் இன்றைய கஷ்டங்களை போக்குமாறும் குறிப்பாக தொழில் நுட்ப துறைமாணவர்களின் கஷ்ட நிலையை நன்குணர்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் தாழ்மையுடன் கோரும் நாம் உங்களுக்கும் உங்கள் அரசாங்கத்துக்கும் எமது முழுமையான ஆதரவையும் அளிப்போம்.

# பிரதமர், சபாநாயகருக்கு ஒரே சம்பளம்!

கொழும்பு, புதன்

பிரதமருக்கு வழங்கப்படும் சம்பளமே சபாநாயகருக்கும் வழங்கப்படுகிறது.

இலங்கையின் பிரதமருக்கும், செனெற்சபைத் தலைவருக்கும் மாதாந்தம் வழங்கப்படும் 1500 ரூபா சபாநாயகருக்கும் வழங்கப்படுகின்றது. ஆனால் இவர்கள் மூவருக்கும் கொடுக்கப்படும் படிகள் வித்தியாசப்படுகின்றன. பிரதமருக்கு 1500 ரூபாவும் செனற்சபைத்தலைவருக்கு 500 ரூபாவும் சபாநாயகருக்கு 50 ரூபாவும் பரிசாக வழங்கப்படுகின்றன.

பிரதமர் செனெற் சபைத் தலைவர் போல சபாநாயகருக்கும் உத்தியோக பூர்வமான கார்வசதி உண்டு. பிரதமருக்கு உரிய உத்தியோக பூர்வமான அலரிமாளிகை போல சபாநாயகருக்கு மும்மரஸ்மகால் வாசஸ்தலம் உண்டு.

## அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றும்

பத்தேகம, புதன்

தேர்தல் பிரசாரத்தின் போது ஐக்கியமுன்னணி மக்களுக்கு அளித்த சகல வாக்குறுதிகளையும் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிறைவேற்றும். ஹினிடுமா ஆட்சி மன்ற அங்கத்தவர் உடுகமதனக்களிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாட்டில் முதலாளித்துவத்தை ஒழிக்கவும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்கவுள்ளது. 2படி அரிசியை மக்களுக்கு வழங்கவும் வாழ்க்கைச்செலவைக் குறைக்கவும் வேலையில்லாப் பிரச்னையைதீர்க்கவும்வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் எனக் கூறினார்.

## குழந்தை முகத்துடன் ஆட்டுக்குட்டி

ஆலங்குளம், ஜூன் 10

நெல்லைமாவட்டம் காசியார் புரத்தைச் சேர்ந்த மவத்திலிங்கம் என்பவருடைய வீட்டில் ஒரு வெள்ளாடு, குழந்தை முகத்தோடு கூடிய கண் மூக்கு, காது, முன்னங்கால்கள் ஆகியவற்றுடன்மனித குழந்தை போன்ற அம்சத்தோடு பிறந்தது. இந்த அதிசய ஆட்டுக்குட்டி பிறந்த சிறிது நேரத்தில் இறந்து விட்டது.

## விஞ்ஞானக் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியா,

இம்மாதம் 15, 16,17ந் திகதிகளில் கிளிநொச்சி, சாவகச்சேரி, பருத்தித்துறை, உடுப்பிட்டி தொகுதி பாடசாலைகளால் கரவெட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானக் கண்காட்சி விழா நடைபெறவிருக்கிறது.

15,16ம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6மணி வரையும் 17ம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை 'காட்சி' திறந்துவைத்திருக்கப்படும். பொது விஞ்ஞானம் பௌதிகவியல், இரசாயனவியல், புவியியல், கணிதம், ஒளிப்படவியல் ஆகிய பகுதிகளில் கண்காட்சி பெறும். அப்பல்லோ 12ம், மற்றும் விஞ்ஞானப் படக்காட்சிகளும் காண்பிக்கப் இடம்படும்.

வாழ்க்கை' என்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் விளையாட்டுத்துறை ஆசிரியராகக் கடமையாற்றி பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு விசேட பயிற்சி பெறச்சென்றுள்ள திரு. செ. அமிர்தலிங்கத்தை கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற பிரிவு உபசார தேநீர் விருந்துவைபவத்தில் பேசிய திரு. சி. ஆறுமுகம் (வித்துவான்) சொன்னார். திருவாளர்கள் க. சிவகுமாரன், எஸ். கதிர்காமநாதன், எஸ். கல்யாணசுந்தரம், ஆகியோர் உட்பட மற்றும் பலரும் பேசினர். திரு கே. வாகீசர் தலைமை தாங்கினார். கூட்டம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்றது.

## ஆங்கிலப் போட்டியில் சிக்கல்

பருத்தித்துறை, புதன்

ஆண்டு தோறும் கல்விப் பகுதியால் நடாத்தப்பட்டு வரும் பேச்சு, எழுத்து, உச்சரிப்பு, வியாசப் போட்டிகளில் இவ்வாண்டு பல பாடசாலைகள் பங்குபற்ற முடியாத நிலைமை உருவாகலாமெனத் தெரிகிறது. காரணம் இப்போட்டிகளிற்பங்குபற்றும் பாடசாலைகள் கட்டாயமாக ஒரு நாடகத்தில் அல்லது கூட்டுப்பாடலிலும் பங்குபற்ற வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள புதிய நிபந்தனையேயாகும். ஆங்கிலத்தில் நாடகத்துக்கோ, கூட்டுப்பாடலுககோபயிற்சியளிக்கத் தகுதியுள்ள ஆசியர் பல பாடசாலைகளில் இல்லை.

## மன்னாரில் காணிக் கச்சேரி

முசலி, புதன்

மன்னார் மாவட்டத்திலுள்ளகொல்லிவிழாங்குளம் அருகில் காணிக்கச்சேரி நடைபெறுகிறது. இக்காணிக்கச்சேரி மன்னார், மாந்தை முசலி ஆகிய காரியாதிகாரி பிரிவுகளில் நடைபெறுகிறது விவசாயிகள் விவசாய மாணவர்கள் ஆகியோருக்கே இக்காணிகள் கொடுக்கப்படும். காணி பெறுவர்களுக்கு காணிதிருத்தி வீடுகட்டுவதற்கு முற்பணம் கொடுக்கப்படும். இவர்கள் அரசாங்கத்தால் கொடுக்கப்படும் விவசாய நிலங்களிலேயே வாழவேண்டும்.

இன்னிசையால் தமிழையும் வளர்த்தார் என்றும் உணர்ச்சியுடன் பேசியபோது, அங்கிருந்தபெருங் கூட்டம் பன்முறையும் கரகோஷம் செய்து பாராட்டியதாம். தமிழ் நட்டிலே இன்றுள்ள நிலையில் இவ்வளவு துணிச்சலுடன் வேறுயார் இப்படிப்பேசியிருக்க முடியும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் தமிழகத்தில் செய்த வீரக்கர்சனை துணைதான் எனக்கு ஞாபகம்

முன்,  
தாளம் ஈந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மை  
யாளனை என்மனக் கருத்தை  
ஆளும் பூதங்கள் பாட  
நின்றாடும் அங்கணன் தனை எண் கணம்  
இறைஞ்சும்  
கோளிலிப்பெருங் கோயிலுளானைக் கோலக்  
காவினில் கண்டு  
கொண்டேனே.  
—ஸ்ரீ சுந்தரமூர்த்தி  
சுவாமிகள்

# 'யாழ். சிரேஷ்டதொழில்நுட்ப வேலைகளைத்துரிதமாக்குக'

## கல்வி மந்திரிக்கு மகஜர்

மாவிட்டபுரம், புதன்

இலங்கையில் தமிழ் மூலம் போதிக்கப்படும் ஒரே தொழில் நுட்ப நிலையமான யாழ். கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்தில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி தமிழ் மொழி மூலம் பயிலும் மாணவர்களின் வாழ்க்கையை தரமுடையதாக்க யாழ்ப்பாண சிரேஷ்ட தொழில் நுட்ப நிலைய வேலைகளை மேலும் துரிதமாக்கி விரைவில் நிறைவேற்றும்படி இலங்கை தொழில் நுட்ப மாணவர் சங்க சம்மேளனம் கல்வியமைச்சருக்கு அனுப்பியுள்ள வேண்டுகோள் கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

இச் சம்மேளன செயாலளர் திரு. சபா. புஸ்ப்பநர்தன் புதிய கல்வியமைச்சர் திரு. பதியுதீன் முகமதுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நீங்கள் கவி மந்திரியாக நியமிக்கப் பட்டதும் எமது தொழில் நுட்ப துறை கல்வியில் இதுவரை ஏற்பட்டிருந்த கறைகள் அகற்றப்பட்டுவிட்டது. போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இலங்கை தொழில் நுட்ப மாணவர் சங்க சம்மேளனம் உங்களதும், உங்கள் அரசாங்கத்தினதும் பெரு வெற்றியில் கணிசமான பங்கு கொண்டுள்ளது. ஈழத்தின் சகல தொழில் நுட்ப துறை மாணவர்களுக்கும் சமசந்தர்ப்பம் அளித்து அவர்களை முன்னேற தக்க சிறந்த கல்வித் திட்டங்களை வகுக்கவும்.

உங்கள் அரசாங்கத்துக்கும் உங்களுக்கும் இலங்கை தொழில் நுட்ப சங்க சம்மேளனம் என்றும் பக்கபலமாக நின்று உழைக்கும்'' என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருட்காட்சி ஒத்திவைப்பு

பருத்தித்துறை, புதன்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இம்மாதம் 14-ம் திகதி ஆரம்பிக்கவிருந்த வடபகுதி விஞ்ஞானப் பொருட் காட்சி இம்மாதம் 15, 16, 17-ம் திகதிகளில் நடைபெறுமென வடமாநில விஞ்ஞான கல்வியதிகாரி திரு. எம். அற்புதநாதன் கூறினார்.

வடமாநில உதவிவித்தியாதிபதி திருமதி. ஆர். எஸ். பாமர் பொருட்காட்சியைத் திறந்து வைத்து உரைநிகழ்த்துவார்.

## சிகானுக் எங்கே?

ஹனோய், ஜூன். 10

கடந்த மாதம் 25-ந் திகதி பீகிங்கில் இருந்து ஹனோய் வந்திருந்த பதவி நீக்கஞ்செய்யப்பட்ட கம்போடிய இளவரசர் சிகானுக், ஹனோயிலிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டதாக ஹனோயிலிருந்து கிடைக்கப்படும் செய்திகள் தெரிவித்தன. ஆனால் சிகானுக் எங்கே செல்கிறார் என்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை.

## குடும்பதிட்ட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வியழன்

குடும்பத்திட்டம் பற்றிய கருத்தரங்கம் ஒன்று இன்று மாலை யாழ். வைத்தியசாலையிலுள்ள தாதிகள் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சி. சி. டீ. சில்வா டாக்டர் கே. சிவஞானரத்தினம், டாக்டர் ஈ. காங்கேசு. டாக்டர் ஆர். இராமலிங்கம் ஆகியோர் இக் கருத்தரங்கில் உரையாற்றுகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org